பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 27 திங்கட்கிழமை (12.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 16

# அனுசரணைப் பணியை நோர்வே மீள ஆரம்பிப்பதில் இக்கட்டு நீடிப்பு

## திருப்தி அளிக்கக்கூடிய உறுதிப்பாடு இன்னும் இரு பக்கங்களில் இருந்தும் வரவில்லையாம்

கொழும்பு,டிசெம்பர் 12

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப் பணி வகிக்கும் தனது பணியைத் தொடரும் படி நோர்வேயை இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ள போதிலும் நோர்வேயின் அனுசரணைப் பணி ஆரம்பமாவதில் தொடர்ந்து இழுபறியும், தடங்கலும் நீடிப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

**அனுசரணைப் பணியை மீளத் தொடங்குவதற்கு முன் நிபந்தனையாக நோர்வே குறிப்பிட்ட விடயங்களுக்குத் தெளிவான பதில் - திட்டவட்டமான முடிவு - இன்னமும் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புகளில் இருந்து நோர்வேக்குக் கிடைக்கவில்லை. அதனால் அனுசரணைப் பணி தொடர்பான நடவடிக்கைகளை நோர்வே இப்போதைக்கு ஆரம்பிக்காது எனத் தெரியவருகின்றது.**

அனுசரணைப் பணியை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் பொதுவாகவும், தனித்தனியாகவும் வெவ்வேறு விடயங்களை நிபந்தனையாக நோர்வே முன்வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

நோர்வே அனுசரணையின் கீழான அமைதி முயற்சிகளை இழுத்தடிக்காமல் பயனுள்ள வகையில் அதை முன்நகர்த்துவதற்கான திடசங்கற்பத்தை - பற்றுறுதியை - வெளிப்படுத்தும்படி இரு தரப்பையும் நோர்வே கேட்டுக்கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, இதுவரையான பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அதிலிருந்து அமைதி முயற்சிகளைத் தொடர இணங்குவதான அறிவிப்பு ஒன்றை விடுக்கும்படியும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று அரசுத் தரப்புடன் பேச்சு

கொழும்பு,டிசெ.12

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும், அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜோன் குணரட்ணவிற்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று நடைபெறவிருக்கிறது.

அரச சமாதான செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுடன் இளைஞர் வாழைச்சேனையில் கைது

ஏறாவூர்,டிசெ.12

வாழைச்சேனை - கறுவாக்கேணி பிரதேசத்தில் கைக்குண்டொன்றுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டேவிட் தேவதாஸ் (வயது 24) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

### நிபந்தனை விதிப்புப் பற்றி அறிவித்தமைக்காக

## இலங்கை அரசின் அதிருப்தி இன்று நோர்வேக்குத் தெரியப்படுத்தப்படும்

கொழும்பு,டிசெ.12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கும், கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகளைக் கையாளும் விடயத்தில் இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் சில நிபந்தனைகளை முன்வைத்துச் செயற்படப் போவதாக நோர்வே அனுசரணைத் தரப்பு பகிரங்கமான அறிவிப்புகளை வெளியிட்ட பின்னர் இன்றைய இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது.

அமைதி முயற்சிகளுக்கு அனுசரணையாகச் செயற்படும் ஒரு தரப்பு அரசாங்கமொன்றுக்கு நிபந்தனைகளை விதிப்பதா என்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியசாலையிலிருந்து பெண் போராளி கடத்திச் செல்லப்பட்டார்

### காவலுக்கு நின்ற பொலீஸை சுட்டுக்கொன்றுவிட்டு

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த - விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்பட்ட - இளம் பெண் ஒருவரை- பொலீஸ்காரர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஆயுததாரிகள் கடத்திச் சென்றனர்.

இந்தச் சம்பவம் வவுனியா வைத்தியசாலையின் முதலாம் வார்ட்டில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்றது.

புவனேஸ்வரி குணரட்ணம் (உதயா) என்ற பெண்ணே இவ்வாறு கடத்தப்பட்டவராவார்.

கடந்த செவ்வாயன்று மன்னார் கடலோரத்தில் இவரும் மற்றும் நால்வரும் படகு ஒன்றில் வந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் - கடற்படையினர் இவரைக் கைது செய்ய முயன்ற சமயம் இவர் 'சயனைட்' அருந்த முற்பட்டார் என்றும் - கூறப்பட்டது. இதனால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்றத்தில் இருந்து 4 மோ. சைக்கிள்கள் அபகரிப்பு

### வெள்ளி இரவு கொள்ளையர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு மோட்டார் சைக்கிள்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காவலாளிகளைக் கட்டி வைத்துவிட்டு ஆயுதமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

துப்பாக்கி, வாள் என்பன சகிதம் நீதிமன்ற வளாகத்துள் வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் நுழைந்த அறுவர் கொண்ட கொள்ளையர்களே அங்கு கடமையில் இருந்த இரு காவலாளிகளையும் கட்டிப்போட்டுவிட்டு மோட்டார் சைக்கிள்களை அபகரித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் சுமார் இரு மணி நேரம் தங்கி நின்ற கொள்ளையர்கள் நீதிபதிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமையை ஆராய அமெரிக்க ராஜதந்திரி வருகிறார்

கொழும்பு,டிச. 12

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான இலங்கையின் களநிலைவரத்தை ஆராய்வதற்காக மூத்த இராஜதந்திரியொருவரை இலங்கைக்கு அனுப்புவதற்கு அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது.

இதன்படி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த உறுப்பினரும், தெற்காசியா தொடர்பில் ஆழ்ந்த அறிவு கொண்டவருமான நிக் பேர்ன்ஸ் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வரவுள்ளார்.

கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியற் பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ள அவர் இறுதியில் இலங்கை நிலைவரம் தொடர்பில் அமெரிக்க அரசுக்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கை வரவுள்ள நிக் பேர்ன்ஸ் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தற்போதைய அரசாங்கத்தில் வெகுவிரைவில் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்கக் கூடுமென்றும் தெரிகிறது. (ஐ-க)

## ஜி.சீ.ஈ. பரீட்சை இன்று ஆரம்பம்

கொழும்பு,டிசெ.12

இன்று ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு நாடு முழுவதிலுமிருந்து சுமார் 5 லட்சத்து 25ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர்.

இவர்களில் சுமார் ஒரு லட்சத்து 47 ஆயிரம் பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றுகின்றனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டை அவசியம் இல்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகளே போதும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## யாழ். சம்பவங்களை விசாரிக்க இருவர் கொண்ட குழு நியமிப்பு

கொழும்பு,டிசெ.12

குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருவர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்தக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சந்திரதாஸ் நாணயக்காரவும் அதன் உறுப்பினராக முன்னாள் இராஜதந்திரி யாவிட் ஜூசுப்பும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கான முக்கிய காரணிகளை இனங்கண்டு அவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இக்குழு பரிந்துரைக்கும்.

இக்குழு அதன் விசாரணைகள், ஆய்வுகளை அடிப்படையாக வைத்து அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## ராணுவ வாகன விபத்தில் ஒருவர் காயம்


யாழ்ப்பாணம்,டிசெ.12

ஊரெழு இராணுவ முகாமிற்குச் சமீபமாக நேற்று இடம்பெற்ற இராணுவ வாகனம் சம்பந்தப்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய எஸ்.அன்ரனிபோல் என்பவரே காயமடைந்தார்.

நேற்று பிற்பகல் புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரில் ஒருவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார். (ஐ-7)







அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயாவின் இறுதி அஞ்சலி நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அவரது இல்லத்தில் திருவுடல் சமாதி நிலையில் வைக்கப்பட்டிருப்பதையும் நல்லை ஆதீன முதல்வர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் அஞ்சலி செலுத்த வந்தவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

## கொக்குவிலில் வெள்ளத்தில் கிராமம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

கொக்குவிலில் பொற்பதி வீதியில் பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் - பெரும் வெள்ளம் தேங்கியதால் சுமார் 40 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

விடாது கொட்டிய மழையால் இந்தப் பகுதியில் வழமைக்கு மாறாக வெள்ளம் தேங்கியுள்ளது என்று ஊர்வாசிகள் தெரிவித்தனர்.

கிராமத்தை வெள்ளம் சூழ்ந்த நிலையில் அரச அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து அவர்கள் ஆட்சேபம் வெளியிட்டனர். (ஐ-149)

## வீர சைவ மரபுப்படி கிரியைகளுடன் அருட்கவியின் உடல் சமாதி வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

நேற்று அதிகாலை இயற்கை மரணம் எய்திய மூதறிஞரும் சமயப் பிரசாரகரும் இந்து சமயப் பேரவையின் தலைவருமான அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயாவின் திருவுடல் நேற்றுப் பிற்பகல் சமாதியில் வைக்கப்பட்டது.

அளவெட்டி நாகவரதநாராயணர் திருக்கோயில் சுற்றாடலில் உள்ள அவரது இல்லத்தில் திருவுடல் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தது.

சமயத் தலைவர்கள்,கல்விமான்கள், பக்தர்கள், படையினர், வர்த்தகர்கள் எனப் பலர் திரண்டு வந்து மலர் வளையம் வைத்து ஐயாவிற்கு வணக்கம் செலுத்தினர்.

விநாசித்தம்பி ஐயா எழுதிய பாடல்கள் மற்றும் தேவாரங்கள், திருப்புராணங்கள் என்பன அங்கு இசைக்கப்பட்டன.

இரங்கல் உரைகள் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றன.

இரங்கல் உரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் க.சிற்றம்பலம் உட்படப் பலர் நிகழ்த்தினர்.

வீர சைவமரபின்படி திருவுடலுக்கு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன. விசேடமாக வடிவமைக்கப்பட தேரில் திருவுடல் வைக்கப்பட்டு அளவெட்டி நாகவரதநாராயணர் திருக்கோயில் சுற்றாடல் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் தனக்காக விநாசித்தம்பி ஐயாவினால் அமைக்கப்பட சமாதியில் அவரது திருவுடல் வைக்கப்பட்டது.

அதன் பின்னர் உப்பு மற்றும் விபூதி கொண்டு சமாதியினைப் பக்தர்களும் சமயத் தலைவர்களும் கல்விமான்களும் மூடினர்.

இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர். (ஐ-7)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

## அ.பொ.செல்லையா காலமானார்



யாழ்ப்பாணம்,டிசெ.12

சிறந்த எழுத்தாளரும் பேச்சாளரும் முன்னாள் அதிபருமான அ.பொ.செல்லையா தனது 70 ஆவது வயதில் கனடாவில் நேற்று முன்தினம் காலமானார்.

தமிழுணர்வு நிறைந்த இவர், தமிழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில், அங்குள்ள இலக்கியப் பெரியார்களையும் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து, அவர்களுடன் நெருக்கிப் பழகித் தமது ஆற்றலை வளர்த்துக்கொண்டார்.

நீண்டகாலம் ஆசிரியராகச் சேவை செய்த இவர், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட கல்வியாளர்.

ஓய்வுபெற்ற பின்னரும் தமது பிரதேச மாணவர்களுக்கும் மக்களுக்குமாகக் கல்விச் சேவையையும் சமூக சேவையையும் தொடர்ந்து ஆற்றினார்.

அ.பொ.செல்லையா பல நூல்களை எழுதியுள்ளார். நோய்வாய்ப்படுவதற்கு முன்னர் அவர் எழுதிய ''திருக்குறள் - மூலமும் எளிமை உரையும்'' என்ற நூல் இம்மாதம் பதினேழாம் திகதி கொழும்பில் வெளியிடப்படவுள்ள முப்பது தமிழ் நூல்களில் ஒன்றாகும். (அ)

# பிரதேச செயலகக் கட்டடத் தொகுதி கரவெட்டியில் கோலாகலமாகத் திறப்பு

கரவெட்டி,டிசெ.12

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகத்திற்கென கரவெட்டி நாவலர் மடம் பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட கட்டடத் தொகுதி நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

முதலில் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க புதிய செயலகக் கட்டடப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு பிரதேச செயலகத்தின் பெயர்ப் பலகையினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து பிரதேச செயலகத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் கூட்டாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர். கட்டடத்திற்கான நினைவுக் கல்லினை யாழ்.மாவட்ட கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன் திரைநீக்கம் செய்து வைத்தார். பிரதேச மாநாட்டு மண்டபத்தினை தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் பிரதேச செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபத்தில் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் மங்கள விளக்கினை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரன்,யாழ்.செயலக பிரதித் திட்டப்பணிப்பாளர் (நியாப்) க.பாலகிருஷ்ணன் உட்பட பலரும் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரைகளை நல்லை குருமகா சந்நிதானம், வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு தண்டாயுதபாணிக தேசிகர், கரவெட்டி பங்குத் தந்தை சீ.ஆனந்தகுமார் மற்றும் நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய பிரதம குரு கௌரிபாலக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வாழ்த்துரையை புதிய பிரதேச செயலகக்கட்டடத்திற்கான காணிக்கொள்வனவுக்

(13ஆம் பக்கம் பார்க்க)

## உடுவில் பிரதேச செயலகத்தில் இன்று இரத்ததானம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

உடுவில் பிரதேச செயலக ஊழியர்களின் இரத்ததான வைபவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் இரத்ததானம் செய்யவிரும்புவோர் குறிப்பிட்ட நேரத்திற்கு பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு உடுவில் பிரதேச செயலர் த.மஞ்சுளாதேவி கேட்டுள்ளார். (ஐ-6)














வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகத்தின் திறப்பு விழாக் காட்சிகள்.... படங்கள் : சுந்தரலிங்கம்

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


# வல்லாதிக்க வலையில் வீழும் தென்னிலங்கை

இலங்கை இராணுவத்தின் முழுத் தேவைகளையும் நிறைவு செய்யத்தக்க வகையில் பலாலியில் உள்ள விமானத்தளம் விஸ்தரிக்கப்படுகிறது. அதற்கான உதவியையும், பங்களிப்பையும் நேரடியாக இந்தியா வழங்குகின்றது.

யாழ். குடாநாட்டில் வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரச இராணுவம் ஆக்கிரமித்திருக்கும், தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் - தாயக மண் - இதயபூமி - இந்த விமானத்தள விஸ்தரிப்பினால் நிரந்தரமாகப் பறிபோகப் போகும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு இரண்டு விதங்களில் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்புகளைத் தரக் கூடிய பரிமாணங்களைக் கொண்டிருக்கின்றது.

முதலாவது - இடம்பெயர்ந்த மக்களின் வளமான தாயக பூமியை நிரந்தரமாகப் பறிக்கும் எத்தனம் இது.

அடுத்தது - தமிழர்களின் தாயகத்தின் மைய நிலையத்தில் தென்னிலங்கையின் ஆதிக்கத்தை அந்நிய சக்திகளின் ஊடுருவல் பங்களிப்போடு வலுவாக ஊன்றும் முயற்சி இது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசின் முடிவு காலத்தின் பின்னர் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் உதயத்தோடு - இலங்கை விவகாரத்தில் அயல்நாட்டு வல்லாதிக்கத்தின் ஊடுருவல் நேரடியாக அதிகரித்திருப்பது துலாம்பரமாகத் தென்படுகின்றது.

புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதவியேற்றதும் புதுடில்லிக்குப் பறக்கிறார்.

அதைத் தொடர்ந்து இந்தியாவின் தென்பிராந்தியத்துக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வி.எஸ். கத்தார் கொழும்புக்கு விஜயம் செய்தார். அது மட்டுமல்ல, அவர் ஓமந்தை வரை சென்று அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்தபடி விடுதலைப் புலிகளின் முன்னரங்கக் காவல் நிலைகளைப் பார்வையிடுகின்றார்.

அவரைப் பின் தொடர்ந்து இந்தியாவின் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஷ் மேத்தா இன்று கொழும்பு வருகின்றார். இலங்கைப் படைத் தளபதிகளுடன் அவர் விசேட கலந்துரையாடல்களை நடத்துவார் என அறிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், கொழும்பு கடல் பகுதிக்கு வந்திருக்கும் இந்தியக் கடற்படையின் பாரிய யுத்தக் கப்பல் ஒன்றும், துணைக் கப்பல்களும் இலங்கைக் கடற்படையின் கப்பல்களுடன் இணைந்து ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபடவிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் இடையில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவோ அடிக்கடி இலங்கையின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துத் திரைமறைவுப் பேச்சுகளை நடத்து கின்றார். மந்திராலோசனை செய்கின்றார். புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்குவதற்கான சதித்திட்டங்களே இந்தச் சந்திப்புகளின் நிகழ்ச்சி நிரலில் முக்கியமாக இடம்பெறுகின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இதனிடையே, புதிதாகப் பதவியேற்றுள்ள இலங்கை ஜனாதிபதியும் ஆட்சிப் பீடம் ஏறிய கையோடு அவசரமாக - தமது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக - புதுடில்லி செல்கிறார். அடுத்து வரும் சில நாள்களில் இந்தப் பயணம் இடம்பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர் தரப்போடு முரண்டு பிடிக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்குடைய ஜே.வி.பி. தலைவர்களையும் தமது புதுடில்லிப் பயணத்தின் போது தம்மோடு கூட வரும்படி அழைத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. உள்நாட்டில் யுத்த முறுகலுக்கான ஆயத்தங்களையும், இராணுவ ரீதியிலான இந்திய உதவிகளையும் புதுடில்லியிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பேரத்தைத் தாம் நடத்துவதற்கு ஜே.வி.பி. தலைவர்களும் தமக்கு நன்கு உதவுவார்கள் என்று நினைத்தோ என்னவோ இந்த அழைப்பை விடுத்திருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

தவிரவும், இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை அமைப்புகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நான்குடன் ஐந்தாவதாக இந்தியாவையும் அந்தத் தலைமை அமைப்புக்குள் கொண்டு வந்து செருக முயற்சிக்கிறார் புதிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்தப் பின்னணியில்தான் பலாலி விமானத்தள விஸ்தரிப்பு நேரடியாக இந்தியாவின் பங்களிப்போடும், உதவியோடும் மேற்கொள்ளப்படுவது பற்றிய தகவல் வெளியாகியிருக்கிறது.

இலங்கை, இந்திய விமானங்களைத் தவிர வேற்று நாட்டு விமானங்கள் பலாலித் தளத்தில் இறங்க அனுமதிக்கப்படமாட்டா என்ற இந்தியாவின் நிபந்தனையை ஏற்று இலங்கை அரசுத் தலைமை உறுதிமொழி வழங்கியிருப்பதை அடுத்தே இந்த ஏற்பாடு என்றும் தெரிகின்றது.

புலிகளுடன் இலங்கை அரசு மீண்டும் யுத்தம் செய்யும் நிலைமை ஏற்பட்டு, புலிகளின் தாக்குதலினால் யாழ். குடாநாடு புலிகள் வசம் வீழும் நிலைமை உருவானால் இந்தியாவிடமிருந்து நேரடி இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்தான ஏற்பாடுகளும் பலாலி விமானத் தள விஸ்தரிப்பின் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் நலன்களைப் புறக்கணித்து - வலுவிழந்திருக்கும் இலங்கை அரசுப் படைகளின் பலவீனத்தை சாதகமாகப் பயன்படுத்தி - தனது பூகோளப் பிராந்திய நலன்களை எட்டுவதற்காக - திரைமறைவுக் காய் நகர்த்தல்களை மேற்கொள்கிறது அயல்நாட்டு வல்லாதிக்கம்.

தமிழர்களை இராணுவ ரீதியாக அடக்குவதற்கான வழி என்று நினைத்துக் கொண்டு அந்நிய சக்திகளிடம் அடிபணிகின்றன, தென்னிலங்கையின் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்புகளாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் அரசியல் கட்சிகள்.

சுருங்கக் கூறின் எண்பதுகளின் பின் அரை தசாப்தத்தில் இதே போன்று தாம் மேற்கொண்ட நகர்வுகளுக்குக் கிடைத்த பதிலை - பெறுபேறை - தென்னிலங்கையும், வட இந்தியாவும் மறந்து போனமை தான் வியப்பானது. அதே பாடத்தைப் படிக்க அவை தயாராகுகின்றன. அவ்வளவுதான்.



# அருட்கவி விநாசித்தம்பி அமரரானார்

யாழ்ப்பாணம்,டிசெ.12

அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா நேற்று அதிகாலை தனது 82 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார்.

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராணயத் திருத்தலத்துடன் தன் வாழ்க்கையை இணைத்திருந்த அருட்கவி அவர்கள் சமய, சமூகப் பணிகளில் தனது தள்ளாத வயதிலும் முன்னின்று உழைத்த பெரியார்.

நினைத்த உடனே ஊற்றெடுத்தாற்போல அரும்பெரும் பாடல்களை இயற்றும் கவிஞராக விளங்கியவர் அவர். ஆயிரக்கணக்கான அருட்பாக்களை மிகக் குறிப்பாகக் கீர்த்தனைகளை இயற்றி நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். தெய்வீகப் பணியிலேயே தனது வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்ட அவர், அன்பும் அருளும் நிறைந்தவர்.

கந்தபுராணம், விநாயக புராணம் ஆகியவற்றை எல்லோரும் விளங்கிக் கொண்டு பாடுவதற்கு வகைசெய்யும் விதத்தில் அவற்றை வசன காவியமாகப் பாடியவர்.

ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் விநாசித்தம்பி ஐயா அவர்கள் தொடர்ச்சியாகப் பக்திப் பாடல்களை இயற்றிவந்தார். ஆசிரியப் பணியின் பின்னர் அவர் முழுமையாகத் திருவருள் தொண்டினைப் பெருவிருப்போடு செய்தவர். கவியோகியாகத் திகழ்ந்த அவருக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

இந்துசமயப் பேரவையின் தலைவராகப் பல வருடங்கள் பணியாற்றிய அருட்கவி அவர்கள் நேற்று அதிகாலை நாராயணர் ஆலய வளாகத்தில் சமாதியானார். (அ)

# மலை விளக்கு அணைந்தது!

கலைமகள் கண்ணீர் மல்க
கலங்கிட அடியார் எல்லாம்
தலைமகன் கவிதை கேட்ட
தமிழ்த் தாயாள் அலறி ஏங்க
நிலையிலா உலக வாழ்வின்
நிலையினை எடுத்துச் சொல்லி
அலைகடல் அப்பால் உள்ளோர்க்கு
ஆறுதல் பலவும் சொன்ன
மலைவிளக் கணைந்த தம்மா
மறைந்தனன் விநாசித் தம்பி.

- விகடகவி

# ஐயா... சமாதியாகியும் எங்களுக்கு வழிகாட்டுபவர்

அளவெட்டி அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பி ஐயா நேற்று அதிகாலை இறையடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது. அவரது உடல்நலம் பற்றி இரண்டு வாரங்களுக்கு முன் நாம் அறிந்தபோது இது எதிர்பார்க்கப்பட்ட செய்தி. நாகவரதர்தான் தன் தொண்டனை இழந்துவிட்டார். நாம் என்ன செய்யலாம்.

அன்புக்கும் அமைதிக்கும் அருளுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் அவர். அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் பெரும் எண்ணிக்கையானவை. தமிழிலக்கியங்களையும் புராணங்களையும் நன்கு கற்றுத் தெளிந்தவர். மக்களுக்குத் தேவையான, பொருத்தமான நல்ல கருத்துக்களை எளிய முறையிலே அவற்றிலிருந்து எடுத்து மக்களுக்கு வழங்குவதிலே வல்லவர் அவர்.

பல நூல்களை ஆக்கியுள்ளார். வரகவியாகிய அவர் அருட்கவியாக அருமையான பாடல்களைப் பாடித் தந்துள்ளார். ஒவ்வொரு தடவையும் அவரைக் காணப்போகும்பொழுது அவருடைய புதிய ஆக்கமான ஏதாவது நூல்களைத் தருவார்.

அளவெட்டியிலே நாகவரதருக்குக் கோயில் அமைத்து அதனை இன்று வரை பரிபாலித்து வந்துள்ளார். பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் சென்று தரிசிக்கும் அந்தக் கோயிலை நன்கு பேணி ஒழுங்காகப் பூசைகளும் திருவிழாக்களும் நடைபெற ஒழுங்குகள் செய்துள்ளார். அளவெட்டி மக்கள் இவர் பிரிவினைத் தாங்கமுடியாதிருப்பர்.

அருட்கவி ஐயாவின் பிரிவு கற்றவர்கள், வழிபாடு செய்பவர்கள் யாவருக்கும் பெரிய இழப்பாகும். இந்துப் பேரவை தன்னுடைய தலைவரை இழந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையிலே உறுப்பினராக இருக்கும் பொழுது அவருடன் உடனிருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அருட்கவி ஐயா இறையடியிலே அமைதி பெற்றிருப்பார்.

- பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

# தீவுப்பகுதி பஸ்சேவை தடைப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.12

மத்திய போக்குவரத்துச் சபையினால் யாழ். பஸ்நிலையத்திலிருந்து தீவுப்பகுதிக்கு நடத்தப்படும் பஸ் சேவைகள் அனைத்தும் நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பெய்த பலத்த மழை, கடும் காற்று காரணமாக பண்ணைக்கடல் கொந்தளித்தமையும் -

பண்ணைக்கடலின் ஒரு பகுதியிலிருந்து மறுகரைக்கு கடல் நீர் மேவிப் பாய்ந்ததை அடுத்து யாழ். ஊர்காவற்றறை பிரதான வீதியின் இரு மருங்குகளும் பலத்த சேமடைந்துடன், வீதியில் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டமையும் தெரிந்ததே -

இதனால், தீவுப்பகுதிக்கு கனரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மினிபஸ்கள், சிறிய வாகனங்கள் மட்டுமே நேற்றையதினம் தீவுப் பகுதிக்குப் போக்குவரத்தை மேற்கொண்டன. (எ-7)

# நீரிழிவுப் பரிசோதனை

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறவரும் வெளிநோயாளர்களுக்கு நீரிழிவு (சலரோகம்) நோய் உள்ளதா? என்பதைக் கண்டறிவதற்கான பிரிசோதனையை நடத்துவதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் நீரிழிவு நோய்க்கான சிறுநீர் பரிசோதனையை நடத்துவதற்குரிய வைத்திய உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

# கொழும்பில் ஒரு 'ஹெவ்லொக்' நகர்

மிரெக்கா கெப்பிட்டல் லேண்ட் (தனியார்) நிறுவனம் கொழும்பில் நகர வீடமைப்பு திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றது. இந்த வீடமைப்பின் இரண்டாம் கட்டம் ஹெவ்லொக் நகர் என்ற பெயரில் ஆரம்பமாகவிருப்பதையொட்டி ஹெவ்லொக் வீதியிலுள்ள அவர்களின் பணிமனையில் வரும் 14 ஆம் திகதி சமயச்சடங்கும் மதியம் விருந்தும் இடம்பெறவிருக்கின்றன.

• இத்திட்டம் நிறைவேறும் போது 1080 உல்லாச வதிவிட தொகுதிகளும் 300 அறைகள் கொண்ட ஹோட்டல் ஒன்றும் 200 சேவைநிலையங்களும் 250 கடைகளைக் கொண்ட ஒரு சந்தை, பிரதான பல்பொருள் அங்காடி, சினிமாத் தியேட்டர் மற்றும் நீச்சல் தடாகம் முதலியவை அமைந்திருக்கும் என்று அந்நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது. (ப)

# நம்பிக்கை நிதியத்தில் ஓய்வூதியர்களை இணைத்துகொள்ளுமாறு அழைப்பு

அரச சேவை ஓய்வூதியர்களை நம்பிக்கை நிதியத்தில் இணைந்துகொள்ளுமாறு அந்த நிறுவனத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

இந்த நிதியத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புகின்றவர்கள் அதற்குரிய சம்மதக்கடிதத்தைத் தமது பிரிவு பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அடங்கிய விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் 20 ரூபா அறவிடுமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இது சம்பந்தமான அறிவித்தல் கடிதங்கள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-100)

# 46 பரிசாரகர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்.மாவட்டத்தில் பரிசாரகர்களாப் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 46 பேருக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பரிசாரகர் நியமனக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். சுகாதாரத்திணைக்கள நிறுவனங்களிலும், அரசினர் வைத்தியசாலைகளிலும் சாதாரண தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வந்த மேற்படி 46 பேருக்கும் கடந்த ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து பரிசாரகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி நியமனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பிரிவில் இவர்களை கடமையைப் பொறுப்பேற்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலையில் நிலவிவரும் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களுக்கு இவர்களை நியமனம் செய்ய யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது. (எ-135)

## நாளை

கார்த்திகை 28
செவ்வாய்க்கிழமை
13.12.2005
திதி: திரயோதசி
முன்னிரவு : 09.57 வரை
நட்சத்திரம் : பரணி
முற்பகல் : 09.19 வரை
பிரதோச விரதம்
கார்த்திகைத் தீபம்
சுபநேரம் : 10.50- 12.20
ராகுகாலம் : 03.20 - 04.50
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மரண வீட்டில் அழுகின்றவர்களில் பலர் இறந்தவர்களுக்காக அழுவதில்லை. வாழ்வில் தாங்கள் விட்ட தவறுகளுக்காகவே அழுகின்றார்கள்.

- யாரோ

உ
சிவம

# இந்து சமயப் பேரவைத் தலை

# அருட்கவி சீ.விநாசித்த

# மஹா ச

**புவிமீது:**
ருத்ரோர்காரி வ்ருடம் ஐப்பசித் திங்கள் பதினெட்டாம் நாள்
03-11-1923 - மக நட்சத்திரம்



## சைவ சமயத்தின் உன்னத காவலர்

எங்கள் திருநாட்டில் அருள் ஒளிபரப்பிய உன்னதமான ஆன்மீகத் தலைவர் அருட்கவி சீ.விநாசித் தம்பி ஐயா அவர்களின் மஹா சமாதிச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகிறோம்.

சிறந்த ஆசாரசீலராக, சைவத்தமிழ் அறிஞராக புகழுடன் தொண்டாற்றிய பெருந்தகையின் வாழ்வு மகத்தானது.

இந்து சமயப் பேரவையின் தலைவராக விளங்கி சைவ சமயத்தின் உன்னத காவலராக எம்முன் விளங்கியவர்.

கதாப் பிரசங்க மரபை காலம் முழுவதும் காப்பாற்றிய அருள்நிறைந்த கலைஞர் நல்லை ஆதீனத்தோடு மிக நெருக்கமான தொடர்புடைய இப்பெருந்தகையின் இடத்தை யாரும் நிரப்பமுடியாது.

திருவருள் சக்தி நிறைந்த பேராளர். தேகம் நீங்கிய நிலையில் இறைவனோடு இரண்டறக் கலந்து நின்று எம் மண்ணை ஆசீர்வதிக்கவேண்டி தில்லை நடராசன் திருப்பாதம் பணிந்து பிரார்த்தித்து அமைகிறோம்.

ஓம் சாந்தி !ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நல்லை ஆதீனம்,
நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகள்

## நிம்மதியை அள்ளித்தந்த அருளாளர்

அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா மஹா சமாதி எய்திய செய்தி சைவ உலகைப் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது. நாவலர் பெருமானுக்குப் பின்னர் அவர் வழி நின்று சைவ சமயத்தின் மேன்மைக்கு உழைத்த பரம்பரையைச் சேர்ந்தவர் ஐயா என்றால் மிகையாகாது.

சைவவாழ்வு இன்றைய காலத்தின் தேவை. அதுவும் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவரும் போரின் அனர்த்தங்களால் பலவாறு இன்னல்பட்டு உளலும் மக்களை இறை உணர்வும் இறைபக்தியுமே காத்து நிற்கின்றன.

மனித வாழ்வுக்குத் தேவையானது நிம்மதி. இதனை அளிக்கவல்லவர்கள் அருளாளர்கள்தான். இவர்கள்தான் இறை நிழலில் சஞ்சரித்து மக்களை நல்வழிப் படுத்தும் பேரருளாளர்கள்.

ஐயா ஆற்றிய பணி எமது மக்களுக்கு, திக்கற்றவர்களுக்குத் திசைகாட்டிபோல் அமைந்தது. தமது சமயப் பணியை சமூக நலனுக்காகச் செலவு செய்த பெருந்தகை. எமது இந்துசமயப் பேரவை ஐயா அவர்களைத் தலைவராகக் கொண்டு பெருமை அடைந்தது. அதுவும் இக்கட்டான கால கட்டத்தில் அவரது வழிநடத்தல் மிக மிகத் தேவைப்பட்ட இக்கால கட்டத்தில் ஐயாவின் மறைவு நம்மிடையே பெரிய வெற்றிடத்தை அளித்துவிட்டது. இறை நம்பிக்கையும் இறைபணியும் தான் நமக்கு உறுதுணை.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்,
துணைத் தலைவர் இந்து சமயப் பேரவை.

## திருநீற்றை வழங்கி அச்சம் போக்கியவர்

அருள்வார்த்தைகளால் அடியவர்களை ஆற்றுப்படுத்திய அருட்கவி ஐயாவின் மஹா சமாதியால் ஏற்பட்ட பிரிவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும்.

கவிவல்லவராய், சொற்பெழிவாளராய், சோதிடராய், நல்லாசிரியராய், அருள்வளத்தால் ஆறுதல் தருபவராய் எம்முன் விளங்கிய நடமாடும் தெய்வம் எம்மை விட்டுச் சென்றமை தாங்குமுடியாத துயரத்தைத் தருகிறது. பழுத்த பழமாக, அறிவின் சிகரமாக நின்று பலரது வாழ்வை பயனுள்ள நெறிக்கு வழிப்படுத்திய புண்ணிய ஆத்மா அருட்கவி ஐயா. இவரது இடத்தை நிரப்ப எம் மண்ணில் யாரும் இல்லை.

சிறந்த ஆளுமை மிக்க, ஆன்மீகத்தலைவரை ஈழத்திருநாடு இழந்து தவிக்கிறது. பண்ணோடு பாடி தீது அகற்றும்திருநீற்றை வழங்கி அடியவர் அச்சம் போக்க இவ் அவனியில் இனி யார் உளர்? என் செய்வோம் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்ற மகானின் வார்த்தைகளை மனதில் இருத்தி சமாதி நிலையில் இருக்கும் அருட்கவி சுவாமிகளின் ஆசியை வேண்டுதல் செய்வோமாக.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

### அருட்கவி சீ.விநாசித்தம்பி

தந்தை : விநாயகர் சீனியர்
தாய் : அன்னப்பிள்ளை
பிறப்பு : 03.11.1923- மக நட்சத்திரம்

வீர சைவ மரபீல்

ஆரம்பக்கல்வி : அளவெட்டி அருணாசல வித்தியாலயம்
உயர்கல்வி : அளவெட்டி அருணோதயக் கல்லூரி

07.03.1945 முதல் ஆசிரியப் பணி
திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி

இல்லாள்
திருமணம் - அன்னம்
5 பிள்ளைகள்

இவரால் உருவாக்கப்பட்ட ஆலயம் : 1953 அளவெட்டி ஸ்ரீ நாகவ
நாராயணர் தேவஸ்தானம்

படைப்புக்கள்
1. கந்தபுராண வசன காவியம்
2. விநாயகபுராண வசன காவியம்
1000இற்கு மேற்பட்ட தலங்கள் மீதான ஊஞ்சல் பா
3. அருள் ஒளிக் கீர்த்தனைகள்
4. நாராயணர் பிள்ளைத் தமிழ்
5. தெய்வீக அருட்புகழ்

முதல் பிரசங்கம்
1945 இல்
நாவலப்பிட்டியில்
கண்ணப்பநாயனார் பற்றியது
இலங்கை வானொலியில் ஏராளமா
நற்சிந்தனை சொற்பொழிவுகள்.

**இவ்விதழுக்கு உதவி, அஞ்சலி செலுத்துவோர்:**

| | | | |
|---|---|---|---|
| குகன் ஸ்ரோஸ் யாழ்ப்பாணம். | ஸ்ரீ விக்னேஸ்வரா சாவகச்சேரி. | மகாராணி யாழ்ப்பாணம். | புஸ்ப யாழ் |
| சீமாட்டி யாழ்ப்பாணம். | வேணி களஞ்சியம் யாழ்ப்பாணம். | கு.கந்தையாபிள்ளை யாழ்ப்பாணம். | சாரங்கா யாழ் |

# தமிழர் பிரதேச மனித உரிமை மேம்பாடு குறித்து சர்வதேச அமைப்புக்களுடன் பேச்சு

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி,டிசெ.12

**தமிழர் பிரதேச மனித உரிமை மேம்பாடு தொடர்பாக, சர்வதேச அமைப்புகளுடன் பல்வேறு பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளதுடன், இதுவிடயமான ஆக்கபூர்வ செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

**- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

**வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச மனித உரிமை தின நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தியபோதே அரசியல்துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் நிகழ்த்திய உரை வருமாறு:-**

எமது தேசத்தில் மனித உரிமைகள் தொடர்பான மேம்பாடுகள், சர்வதேச மனித உரிமை விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்வு போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் தாயகத்தின் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மனித உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது தாயகத்துக்கான மனித உரிமைகள் செயலகத்தை உருவாக்கி உள்ளார்கள்.

இது உள்ளூரிலும் இடம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் மத்தியிலும் தொடர்புகளை உருவாக்கி சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. இதனது செயற்பாடுகள் மீது இன்று தமிழீழ மக்கள் முழு நம்பிக்கை கொண்டு தமது நிறைந்த ஆதரவை வழங்கி வருவது எமக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தருகின்றது.

இந்தவகையில், மனித உரிமைகள் செயலகத்தை முன்னின்று செயற்படுத்தி வரும் வணக்கத்துக்குரிய அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாருக்கும் இங்கு வருகைதந்து சிறப்பித்துள்ள மனித உரிமைகள் செயலகத்தைச் சேர்ந்த ஏனைய பெரியோருக்கும் எமது தலைவர் சார்பாகவும் எமது அமைப்பு சார்பாகவும் எமது விசேடமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இந்நாளில் தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

## அரசின் இன அழிப்பே ஆயுதம் ஏந்த வைத்தது

### இன அழிவுப் போர்

இலங்கைத்தீவு காலனித்துவத்தில் இருந்து விடுபட்டகாலம் முதல் ஸ்ரீலங்கா அரசு தமிழர் தேசம் மீது தொடர்ச்சியான இடைவிடாத இன அழிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இந்தக் கொடூரமான இன அழிப்பை எதிர்கொண்டு, எமது அரசியல் தலைவிதியை நாமே தீர்மானித்துக்கொள்வதற்கான சுயநிர்ணய உரிமைப் போராட்டமாக எமது விடுதலைப் போராட்டம் பரிணமித்தது. ஆரம்பத்தில் மென்முறை தழுவிய போராட்டமாக வடிவெடுத்த எமது போராட்டத்தை ஸ்ரீலங்கா அரசு சிங்கள இராணுவத்தின் துணைகொண்டு அடக்க முற்பட்டபோது எமது மென்முறைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவமெடுத்தது.

இன்று எமது மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்ட, எமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக்கொள்ளும் மக்கள் இனமாக தமது தனித்துவமான சுதேசிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணி கௌரவமாக வாழ ஒரு தேசியத் தலைமைத்துவத்தின்கீழ் ஒன்றுதிரண்டுள்ளனர்.

### சுயநிர்ணய உரிமை என்பது என்ன?

சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நாவின் சர்வதேச மனித உரிமைச் சட்ட விழுமியங்களிலும் ஐ.நா. சாசனத்திலும் வரையப்பட்டுள்ள ஓர் இனத்தின் தனித்துவமான வாழ்வுரிமை. எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிராந்திய சட்டங்கள், இச்சட்டங்களில் பொதிந்துள்ள எமது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தன்மை மற்றும் இச்சட்டங்கள் எவ்வாறு சர்வதேச அரங்கிலும் எமது உரிமைப் போராட்டத்திலும் தாக்கம் பெற்றுள்ளன என்பதை நாம் ஆழமாக விளங்கிக்கொள்வது அவசியம்.

இன்று சர்வதேச உறவுகளில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகளில் ஒன்றாக மனித உரிமைகள் விளங்குகின்றது.

இந்நூற்றாண்டின் முக்கிய சர்வதேசப் பிரச்சினைகளாகப் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களின் பரம்பல், சர்வதேசப் பயங்கரவாதம், உலகமயமாக்கலில் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள அரசுகளின் இறைமை, உலகளாவிய சூழல் வெப்பநிலை உயர்வு, 'எயிட்ஸ்' போன்ற கொள்ளை நோய்களின் பரம்பல், உலகளாவிய வறுமை போன்றன இனங்காணப்பட்டுள்ளன. இந் நீண்ட சர்வதேசப் பிரச்சினைகள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளதும் சர்வதேச மாநாடுகளிலும் அரசியல் தலைவர்களது மட்டத்திலும் ஐ.நா. மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகளிலும் தொனிப்பொருளாக சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் அமைந்துள்ளன.

ஐ.நாவில் சர்வதேச மாநாடுகளில் பங்குகொள்ளும் அரசியல்வாதிகளினதும் இராஜதந்திரிகளினதும் பெரும்பகுதியான நேரம் மனித உரிமைகளுக்கே இன்று செலவிடப்படுகின்றது.

ஐ.நாவில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் என்பது தனியே மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணைக்குழுவுடனோ அல்லது அதன் பல்வேறு உப கட்டமைப்புடன் மாத்திரமோ தொடர்புபட்டது அல்ல.

இனப்பிரச்சினைகள் ஐ.நா. பொதுச் சபையிலிருந்து பாதுகாப்புச்சபை வரை தொடர்புகொண்டுள்ளன.

### இரண்டு முக்கிய குறிக்கோள்

ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு முக்கியமான குறிக்கோள் உலக சமாதானமும் மனித உரிமைகளும் ஆகும்.

இதிலிருந்து நாம் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வோம்.

சர்வதேச அரங்கில் மனித உரிமைகள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளமைக்குப் பல, காரணங்கள் உள்ளன. இதில் முக்கியமாக இரண்டுகாரணங்களை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலாவது அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது செப்ரெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர், சர்வதேச அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள்.

குறிப்பாக, பயங்கரவாதத்துக்கு எதிரான போரென்று புதிய அரசியல் சூழல் இங்கு பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நடவடிக்கைகளும் இது தொடர்பான புதிய சட்டங்களின் அமுலாக்கமும்.

ஐ.நா. மற்றும் பிராந்திய மனித உரிமைச் சட்ட விழுமியங்களை மீறுபவனவாக - மீறுபவையாக - அமைந்து, சர்வதேச ரீதியிலும் ஐ.நாவிலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது.

## சர்வதேச சமூகம் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் தப்பானவை

எம்மைப் பொறுத்தவரையில் இச் சூழல் சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச சட்டவிழுமியங்களின் அடிப்படையிலும் ஐ.நா. சாசனத்தின் அடிப்படையிலும் நெறிப்படுத்தப்பட்டுள்ள எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஸ்ரீலங்கா அரசு, பயங்கரவாதமாகச் சர்வதேச அரங்கில் பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தது.

இரண்டாவதாக, இன்றைய சர்வதேசச் சூழலில் நாடுகள் தமது தேசிய சர்வதேச நலன்களை முன்னெடுப்பதற்கான கருவியாக மனித உரிமைகளைக் கையில் எடுத்திருப்பதும் இன்று மனித உரிமைகள் உலக அரங்கில் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதற்கான காரணமாக உள்ளது.

இன்றைய யதார்த்தபூர்வ அரசியலில் மனித உரிமைகளின் பிரயோகம் என்பது நடுநிலை தவறிய இரட்டை நிலைப்பாடுகளைக் கொண்ட அணுகுமுறையாக பல சந்தர்ப்பங்களில் அமைந்துவிடுவது வேதனைக்குரியது.

மூன்றாவதாக, மேற்கு ஐரோப்பாவில் மனித உரிமைகளின் அடிப்படையிலான சிந்தனைப் பாரம்பரியமும் சட்டங்களும் சர்வதேச மனித உரிமைக்கான சட்டங்களையும் எமது போராட்டத்தின் நியாயத்தன்மையையும் ஒப்புநோக்குவதற்கும் எவ்வாறு எமது உரிமைகள் சிங்கள அரசுகளால் மீறப்பட்டுவருகின்றன என்பதையும் வெளிக்கொண்டுவருவதற்கு நாம் தெளிவாக மனித உரிமைகள் தொடர்பான இச்சிந்தனையைப் பாரம்பரியத்தை விளங்கிக்கொள்வது அவசியம்.

இன்றைய சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான எண்ணக்கருக்கள் 18ஆம் நூற்றாண்டின் ஜோன் லொக், நூற்ரோ போன்ற சிந்தனையாளர்களால் வெளிப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு மனிதனுக்குமுரிய இயற்கையாய் அமைந்த உரிமைகள் மற்றும் மனிதனுடைய பிரிக்கமுடியாத உரிமைகள் தொடர்பான கருத்துகளை அவர்கள் வலியுறுத்தினர்.

### உயிர்வாழ்வதற்கான உரிமை

மனிதனில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கவோ, பிரிக்கவோ முடியாத இவ்வுரிமைகள் இயற்கையால் கொடுக்கப்பட்ட அவனுடைய உயிர்வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரமாக வாழ்வதற்குரிய உரிமைகளைக் குறித்து நிற்கின்றன.

இவை எந்த அரசுகளாலோ அல்லது நிறுவனங்களாலோ மனிதனுக்குக் கொடுக்கப்பட்டவை அல்ல.

இவை இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனுக்குமுரிய இயற்கையால் அளிக்கப்பட்ட உரிமைகள்.

இயற்கையான மனித உரிமைகளில் இருந்து படிப்படியான வளர்ச்சிப் போக்குகள் ஊடாகச் சட்டநெறிமுறைப்படுத்தப்பட்ட விழுமியங்களே இன்றைய சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள்.

இங்கு சுயநிர்ணய உரிமை என்பது வெறுமனே ஒரு பூடகமான அரசியல் சொற்பதம் அல்ல.

மேற்கூறிய மனிதரில் இருந்து பிரிக்க முடியாத இயற்கையாய் அமைந்த அவனது உரிமைகளான உயிர்வாழ்வதற்கான சுதந்திரமாய் வாழ்வதற்கான உரிமைகளைத் தன்னகத்தே கொண்ட ஓர் ஒட்டுமொத்த இனத்தினுடைய உரிமை.

### அமெரிக்காவின் பிரகடனம்

இன்றைய ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் இவ்வுன்னதமான இயற்கை உரிமைகளின் அடிப்படையிலேயே வரையப்பட்டது.

மனித உரிமைகளின் மூன்று மிகப் பிரதானமான அதி உன்னதமான உரிமைகளாகக் கொள்ளப்படுபவை அவனுடைய வாழ்வதற்கான உரிமை, தனது அடையாளத்தைப் பேணுவதற்கான உரிமை, தனக்கென்ற தாயகத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை. இங்கு அடையாளத்தைப் பேணுவதற்கான உரிமை என்பது தனது தனித்துவமான பாரம்பரியங்களான பண்பாடு, மொழி, மதம், பழக்கவழக்ககங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து பேணிக் கடைப்பிடிப்பதற்கான உரிமையாகும்.

அடுத்து, தாயகத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை என்பது தனக்கென்ற தேசத்தையும் வதிவிடத்தையும் அங்கு அந்நிய தலையீடுகள் இன்றி சுதந்திர நடமாட்டத்திற்கும் வாழ்வதற்குமான உரிமை. அத்துடன், இதுதான் எங்கு வாழ்ந்தாலும் தனது தேசத்திற்குத் திரும்பிச் செல்வதற்கான உரிமையையும் கொண்டிருக்கிறது.

தாயகத்துக்கான எமது உரிமை ஏனைய பல தனிமனித உரிமைகளான குடியியல், அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை அனுபவிக்க வழிசெய்யும் ஓர் அடிப்படை மனித உரிமையாகும்.

### பிரிந்துசெல்லும் உரிமை

எல்லாவற்றிலும் மிகமுக்கியமாகத் தனது அரசியல் தலைவிதியை வேறு எவரினதும் தலையீடு இன்றித் தானே தீர்மானித்துக்கொள்வதற்கும் - தேவையேற்படின் பிரிந்துசெல்வதற்குமான உரிமையையும் இது குறித்து நிற்கின்றது.

இன்று தமிழர் தாயகத்தில் எமது மக்கள் மேற்கூறிய இயற்கையான உரிமைகளான உயிர்வாழ்வதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்குமான உரிமைகள் கூட அச்சுறுத்தலுக்குள்ளான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

### மக்களின் அகதி வாழ்வு

எமது தாயகத்தைத் தனது சிங்கள இராணுவம் மூலம் ஆக்கிரமித்து எமது மக்கள் தமது சொந்த வதிவிடங்களில் வாழ முடியாது அகதி முகாம்களிலும் நலன்புரி முகாம்களிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இன்றைய சூழலில் எமது மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும்போதெல்லாம் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்தும் கூட இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கொல்லப்படுகிறார்கள்.

தமிழ்மக்கள் தமது, உரிமைகளுக்காக அமைதி வழிப் போராட்டங்களை மேற்கொண்ட காலம்முதல் இன்றுவரை ஸ்ரீலங்காவின் சிங்கள அரசுகள் தமிழ்மக்களின் மீது தொடர்ச்சியாக இராணுவ அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது. ஸ்ரீலங்காவில் இந்த அரச பயங்கரவாதத்தினால் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட தொடர்ச்சியான படுகொலைகள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், தமிழ்மக்களின் இயற்கையால் அமைந்த உயிர் வாழ்வதற்கும் சுதந்திமாக வாழ்வதற்குமான உரிமைகளைக் கூட இல்லாதொழித்து 1948ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பும் குற்றத் தவிர்ப்பும் அக்குற்றத்துக்கேற்றதான தண்டனையும் பற்றிய உடன்படிக்கையின் சரத்து 2 இன அழிப்புக் குற்றங்களாக ஒரு தேசிய இனத்தின் அங்கத்தவர்களை அடிப்பதுவும் அவர்களுக்கு உடல் உளரீதியாகக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துவதையும் வரையறுக்கின்றது. இது சிங்கள அரசுகளின் எமது மக்களுக்கெதிரான அழிப்பு நடவடிக்கைகளைத் தெளிவாகத் திட்டமிட்ட இன அழிப்பாக இனங்காட்டுகின்றது.

ஸ்ரீலங்கா அரசுகளின் எமது மொழி, கல்வி மற்றும் பொருளாதார, பண்பாட்டுச் செயற்பாடுகளைப் பாதிக்கும் நிர்வாக சட்ட ரீதியான செயற்பாடுகள், ஸ்ரீலங்கா அரசு உறுப்புரிமையுடைய குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றின் பல்வேறு சரத்துக்களை அப்பட்டமாக மீறியுள்ளது.

எமது மக்கள் மீதான படுகொலை நடவடிக்கைகள், திட்டமிட்ட இனக்கலவரங்கள், பாலியல் வல்லுறவுகள், காணாமற்போனவர்கள் இரகசிய மனிதப் புதைகுழிகள், இரகசிய சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், விசாரணையின்றி தொடர்ச்சியாகத் தமிழ் இளைஞர் - யுவதிகள் சிறைகளில் தடுத்துவைத்திருத்தல், அவர்களுக்கு எதிராக மனிதநேயமற்ற நடவடிக்கைகளும், சித்திரவதைகளும் மேற்குறிப்பிட்ட மனித உரிமை உடன்படிக்கைச் சரத்துக்களை மட்டுமல்லாது சகல வடிவங்களிலுமான இனப்பாகுபாட்டினை ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை, இன அழிப்பு உடன்படிக்கை போன்ற உடன்பாடுகளின் சரத்துக்களையும் மீறுகின்றன.

(வளரும்)



## உங்களுக்குத் தெரியுமா?

* செல்போனின் கதிர் இயக்கம் மூளை - இருதய செல்களை பாதிப்படையச் செய்கின்றன.
* ரீ.வி மற்றும் கணனிகளின் மின்காந்த சக்தி நம் உடலில் உள்ள உயிர்காந்த சக்தியில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

தவிர்க்க முடியாத இவைகளினால் ஏற்படும் உடல் நோவு -வருத்தம் - மன அழுத்தம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற :

**ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி**

உடல் முழுவதும் ஒவ்வொரு செல்களிலும் பிராண சக்தியை பரவச் செய்து உயிர்காந்த சக்தியை சமநிலைப்படுத்துகிறது.

**நாள் :** 12.12.2005 திங்கட்கிழமை மாலை 6 மணி
(பயிற்சி பற்றிய இலவச அறிமுக உரை)

**இடம் :** சர்வதேச வாழும் கலை அறநிறுவனம் யாழ்.வீதி, தேசிய சேமிப்பு வங்கி - எதிர் ஒழுங்கை, மானிப்பாய்.

*பயிற்சி நாள்கள்: 13.12.2005முதல் 18.12.2005வரை*
*பயிற்சி நேரம் : மாலை 6 மணிமுதல் 8மணி வரை*
*மேலும் தொடர்புகளுக்கு: 077 - 9059544, 077 - 9059549, 077-6160214*
www.artofliving.org www.srisriravishankar.org




## துயர் பகிர்கின்றோம்

**எந்திரி கி. துரைராசா**
(யாழ். கிளை முகாமையாளர், நிர்மாண உத்தரவாத நிதியம்)

எம்மை அன்பாக நிர்வகித்து எமது பிரதேச அபிவிருத்திக்கு உழைத்தவரின் திடீர் மறைவால் ஆழ்ந்த அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தண்ணீரூற்று,
முள்ளியவளை. (சி/46726) **- அபி கொன்ஸ்ரக்சன்.**

## சபிண்டீகரண அழைப்பு



தோற்றம்1929-04-09
மறைவு2005-11-12

கடந்த 12.11.2005 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

**திருமதி கனகரத்தினம் இரத்தினம்**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினரோடு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி,கைதடி. (43754)(51-11-45)

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20-08-1940 | உதிர்வு 27-11-2001

அமரர்

**தம்பிப்பிள்ளை பரமசிவம்**
(ஓய்வுபெற்ற யாழ்.கல்வித்திணைக்கள ஆவணஅறைப் பொறுப்பாளர்)
திதி:- 12-12-2005

நான்காண்டுகள் நகர்ந்ததுவோ நம்ப முடியவில்லை
ஆண்டாண்டு அசுரவேகத்தில் நகர்ந்தாலும்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தற்காலிக முகவரி:
19/2, சாஸ்திரியார் லேன்,
அரியாலை. (43874)(26-14-13)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்



### சந்தியா லோறன்ஸ்

சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும், பற்றிமா வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியா லோறன்ஸ் அவர்கள் 10-12-2005 சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாகிறேற் லோறன்ஸின் அன்புக் கணவரும் பெனடிக்ற், மரியநாயகம், தேவரட்ணம், ராஜேஸ்வரி, நோயல் பிரான்சிஸ், அன்னமேரி நீடா ஆகியோரின் அன்புத் தகப்பனும், இருதயநாயகி, ஞானசௌந்தரி, மொடஸ்ரா மேசி, ஜோசப், ஜோதிமலர், வின்சன் குணாளன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12-12-2005) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதை அடுத்து பற்றிமா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு,
தொ.இல:- 0777 242479 (43875)(26-14-13)

தகவல்:
லோ.பெனடிக்ற், ம.வின்சன் குணாளன்,
(நூலகர். பண்டத்தரிப்பு.)


**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.



**தேவை**
யாழ்.நகரில் முன்னணி நகைக்கடை ஒன்றிற்கு கணக்கு எழுதத்தெரிந்த 50-60 வயதுக்குட்பட்ட வேலையாள் தேவை.
தொடர்பு: விளம்பர இல.2764,
(43846)(26-14-13) C/o உதயன்


## துப்புரவுப் பணிகள்

அரியாலை,டி செ.12

கொழும்புத்துறை கிழக்குப் பகுதி மக்கள் 29 நாள் வேலைத் திட்டம் ஒன்றை நிறைவுசெய்துள்ளனர்.

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவேற்றப்பட்டிருப்பதாக சனசமூக நிலையத்தினர் தெரிவித்தனர்.

இந்த 29 நாள் வேலைத்திட்டத்தில் இந்தப் பகுதியைச் சேர்ந்த 165 இற்கும் அதிகமான பொது மக்கள் கலந்துகொண்டனர் என்றும் -

இந்த வேலைத் திட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கான உலர் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் - சனசமூக நிலைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நெடுங்குளம், கொழும்புத்துறை 1ஆம், 2ஆம், 3ஆம், 5ஆம் குறுக்கு வீதிகள், உப்புக்குளம் பிள்ளையார் கோவில் சுற்றாடல், நரசிம்ம வைரவர் கோவில் சுற்றாடல், துரையப்பா, மகாவித்தியாலய சுற்றாடல், சனசமூக நிலைய சுற்றாடல் போன்றவற்றிலேயே இந்த 29 நாள் வேலைத் திட்டத்தின் மூலம் துப்புரவு மற்றும் புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. (எ-17)

## இறுதிப் பரீட்சை

அச்சுவேலி,டி செ.12

யாழ். கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவினால் பாடத்துறைகளுக்கான இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும்-

பரீட்சைகள், பொதுப்பரீட்சைக்கான நிபந்தனைகளுடன் நடைபெறும் என்றும் - யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.(எ-11)

## கண்ணீர்க்காணிக்கை

எமது பாடசாலையில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றும் திருமதி ஆ. நாகேந்திரன் அவர்களின் அன்பு மகன்
செல்வன் **நாகேந்திரன் டிக்ஷன்** அவர்கள்
2005.12.08 அன்று எம்மை விட்டுப் பிரிந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்,
கரவெட்டி.

சி/46725)((51-11-45)


**பிறைற்றின் கல்வி நிலையம்**
சங்கத்தானை சாவகச்சேரி
**கல்வியாண்டு - 2006**
தரம் 6 -11 வரையான
வகுப்புகள்
ஆரம்பம் :- 14-12-2006
புதன் 9.15 a.m.
(43869)(26-13-45)



**மணமகள் தேவை**
கிளிநொச்சி நகரில் வசிக்கும் கௌரவ இந்து. 1967இல் பிறந்த, விவாகரத்துப் பெற்ற, தீய பழக்கவழக்கங்களற்ற நல்ல குடும்பத்தில் பிறந்த, சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.வசதிகுறைந்தவர்கள், ஆதரவற்றவர்கள், விதவைகள் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல: 2765 மே/பா உதயன்.
(சி/46737)(26-13-45)


## பள்ளி முதல்வர் வேண்டுகை

**நிதித்துறையால் நடத்தப்பெறும் நிதி மேலாண்மைக் கல்லூரியின் முதல்வர் பணிநிலைக்குப் பொருத்தமான ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

01. *தகைமைகள்:*
    1. ஓய்வுபெற்ற பள்ளி முதல்வர்
    2. ஓய்வுபெற்ற ஆசிரியர்
    3. ஓய்வுபெற்ற அரச ஆளுகை (நிர்வாக) அலுவலர்
    4. பட்டதாரி
02. *பட்டறிவு:* 10 ஆண்டுகளுக்குக் குறையாத ஆளுகைப்பட்டறிவு.
03. *அகவை:* **40 தொடக்கம் 60 வரை**
04. *வேண்டுகை முடிவுநாள்:* **20-12-2005**
05. *வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:*
    **பொறுப்பாளர்,
    மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
    நாகதம்பிரான் வீதி,
    ஆனந்தபுரம்,
    கிளிநொச்சி.**
06. *நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:* 27-12-2005 காலை 9 மணி
07. *நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:*
    **மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
    நாகதம்பிரான் வீதி,
    ஆனந்தபுரம்,
    கிளிநொச்சி**
08. *நேர்முகத் தேர்வுக்கு வருகைதருவோர் கல்வித்தமைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.*
09. *சம்பளம்: முழுநேர முதல்வராகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப 15,000/ ரூபாவுக்குக் குறையாமல் வழங்கப்படும்.*

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி/46690) (24-21-17-45)

## மரண அறிவித்தல்



### A.P.செல்லையா

**(ஓய்வுபெற்ற அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)**

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட A.P.செல்லையா 10.12.2005 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் பொன்னையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விதானையார் தம்பதியரின் அன்பு மருமகனும் மாறன், சேரலாதன், செந்திலாதன், காலஞ்சென்ற குந்தவி மற்றும் கிள்ளிவளவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றுக்மணி, சுமதி, விஜிதா, டுசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் இளவரசி, ஆதிரை, மதுராந்தகன், மதுராந்தகி, ஆதவன், மீரா, சுவேதா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற புனிதவதி மற்றும் இராசபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், விஜயரத்தினம், நவரத்தினம், இரத்தினம் மற்றும் தங்கரத்தினம், செல்வரத்தினம், இராசரத்தினம் (குட்டி விதானை), சோ.இரத்தினசபாபதி, இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இன்றையதினம் அன்னாரது மீசாலை இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா
416 9079546, 416 6247562
WWW Killi 7.com (43861) (24-26-14-13)

தகவல்:
ப.வே.இராசரத்தினம்
(குட்டிவிதானை)

# விசுவமடுவில் சுகாதாரச் சீர்கேடு; உணவு கையாளும் நிலையங்களுக்கு 'சீல்'

விசுவமடு,டிசெ.12

விசுவமடுப் பகுதியில் சுகாதார நடைமுறைகளுக்கு முரணாக இயங்கிய உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினரால் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சுகாதார சேவைப் பிரிவினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட சுகாதார நடவடிக்கைப் பிரிவினரும், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரும் இணைந்து, விசுவமடு நகர், சந்தை, றெட்பனா, உடையார்கட்டு நகர் ஆகிய பகுதிகளில் காணப்படும் உணவு கையாளும் நிலையங்கள், உணவுடன் தொடர்புடைய நிலையங்கள் என்பவற்றில் அண்மையில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையின் போது அதிகளவான சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்ட மூன்று உணவகங்களும் இரண்டு வெதுப்பகங்களும் 'சீல்' வைத்து மூடப்பட்டன. அத்துடன் மேலும் பத்து நிலையங்களின் உரிமையாளரிடம் தண்டப்பணமும் அறவிடப்பட்டன.

இதேவேளை, இப்பகுதி உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்குப் பொதுச் சுகாதாரம், உணவுச் சுகாதாரம் என்பவை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டதுடன் விசுவமடு, உடையார்கட்டுப் பகுதி வர்த்தகர்களுக்கான சுகாதாரக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (3-6)

## வவுனியாவில் பரவலாக பாதீனியச் செடிகள்

ஒட்டுசுட்டான்,டிசெ.12

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ,பாதீனியத்தின் பெருக்கம் அதிகரித்து வருகிறது.

வவுனியா தாண்டிக்குளம், பூவரசங்குளம், பூந்தோட்டம் மற்றும் மூன்று முறிப்பு ஆகிய பகுதிகளில் முன்பு பரவியிருந்த செடி, தற்போது பெரியதம்பனை வளாகத்திலும் பரவத் தொடங்கியுள்ளது.

நச்சுத்தன்மையுடைய பாதீனியத்தின் பெருக்கம் வேகமாகப் பரவி வருவதனால், இதனை அழிப்பதற்கு உரியவர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (எ-6-341)

# மடுவில் இடம்பெயர்ந்த 125 குடும்பங்கள் 10 வருடங்களாக நலன்புரி முகாம்களில்!

மன்னார் - மடு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த சுமார் 125 குடும்பங்கள் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்ப முடியாமல் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

மடு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள இரணை இலுப்பைக்குளம், பூமலர்ந்தாள், கல்மடுநகர், தேக்கம் காடு மற்றும் மடு வீதி ஆகிய கிராமங்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் குடியிருப்புக்கு மறுக்கப்பட்டுள்ளன.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக மேற்படி கிராமங்களைச் சேர்ந்த சுமார் 123 குடும்பங்கள் தச்சனாமடு நலன்புரி நிலையத்தில் பல்வேறு வசதியீனங்களுக்கும் மத்தியில் தங்கியுள்ளன.(எ-6-341)

# தேசியமட்டத்தில் கிட்டு நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

கிளிநொச்சி,டிசெ.12

மாவீரர் நினைவாக மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய அணிகளை ஒன்றிணைத்து தமிழீழ தேசிய ரீதியிலான கேணல் கிட்டு ஞாபகார்த்த உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 10ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுபோட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும், 2ஆம் இடம் பெறும் அணிக்கு 25ஆயிரம் ரூபாவும் பணப் பரிசுகளுடன் பதக்கங்கள், சான்றிதழ்கள் எனப் பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் -

போட்டியில் கலந்துகொள்ளும் அணிகள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறும் இது தொடர்பான மேலதிக விவரங்களை அந்த அந்த மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர். (3-6)

# மழையினால் சேதமடைந்த வீடுகளுக்கு கூரைத்தகடு வழங்குமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,டிசெ.12

ஒட்டுசுட்டன் பிரதேசத்தில் மழையினால் சேதமடைந்த வீட்டுக் கூரைகளை வேய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

பெரும் மழையால் சேதமுற்ற வீடுகளை மீண்டும் வேய முடியாத இக்கட்டான நிலையில் தாம் இருப்பதாகவும்- இடையிடையே பெய்து வரும் மழையினால் தாம்மேலும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் - அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது இருப்பிடங்களை வேயமுடியாது அவதிப்படும் வறிய மக்களுக்கு அவசரமாக கூரைத்தகடுகளை வழங்க அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவமுன்வரவேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (எ-6-341)



புளியங்குளம் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழையால் பலத்த சேதமடைந்த வீடொன்றினைப் படத்தில் காணலாம்.

*(படம்:- புளியங்குளம் செய்தியாளர்)*

# இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு முல்லையில் 3 ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றுவர்

புதுக்குடியிருப்பு, டிசெ.12

இன்றையதினம் ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து 541 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சைக்கு பாடசாலைகள் ஊடாக 2 ஆயிரத்து 224 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஆயிரத்து 317 பேரும் தோற்றுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 இணைப்பு நிலையங்களைக் கொண்ட 29 பரீட்சை நிலையங்களில் இவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளன - 'என்றும்

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. - என்றும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-353-203)




# வேணாவில் இணைப்பு வீதி சேதம்! பயணிகள் பெரும் அசௌகரியம்

ஸ்கந்தபுரம்,டிசெ.12

வேணாவில் இணைப்பு வீதி அண்மையில் பெய்த மழையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி வீதியில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் பல லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட பாலம் சீராகப் பராமரிக்கப்படுவதில்லை.

இந்த நிலையில் - அண்மையில் தொடர்ந்து பெய்த பருவ மழையை அடுத்து வீதியினை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்துள்ளது. இதனால் வீதியில் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, இப்பகுதி மக்களின் போக்குவரத்து நன்மைகருதி வீதியைச் செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-6-381)

## புதுக்குடியிருப்பு வித்தியாசாலையில் புலமைப்பரிசிலில் சித்தி பெற்ற 7 மாணவர்கள் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு,டிசெ.12

புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வில், ஈகச்சுடரை புதுக்குடியிருப்புக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஜீ.எஸ். பரமேஸ்வரன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் மா.சுடர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, பொதுச்சுடரினை பரீட்சையில் சித்தி பெற்ற ஏழு மாணவர்களும் ஏற்றிவைத்தனர்.

இதனையடுத்து, மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும், பாடசாலை அதிபருக்கும் பெற்றோர் பாராட்டுக்கள் தெரிவித்து பரிசில்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் மா.சுடர் உரையாற்றுகையில்:

எமது தேசியத் தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றும் முகமாக எமது மாணவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு மாணவனும் செயற்படவேண்டும்- என்றார். (எ-6-353-203)

## இலவச மருத்துவ முகாம்

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சுகாதாரப் பிரிவினரும் பற்சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நடத்திய இலவசமருத்துவ முகாம் கடந்த புதன்கிழமை பூநகரி, கரியாலை, நாகபடுவான் மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இம்முகாமில் பற்சிகிச்சை, பொது மருத்துவ சிகிச்சை, வாய்ப்புற்றுநோய், உயர்குருதி அமுக்கம் மற்றும் சலரோகம் போன்ற நோய்களுக்கான சிகிச்சைகள் நடைபெற்றதுடன் பல், தொற்றுநோய் தொடர்பான கண்காட்சியும், விழிப்புணர்வுக் கருத்தூட்டலும் இடம்பெற்றன.

கரியாலை, நாகபடுவான், குமுழமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (3-6)

# ஆடு, மாடுகளை கட்டாக்காலிகளாக அலைய விடுவதும் அனுமதியின்றி மணல் அகழ்வதும் சட்ட விரோதம்

## கரைச்சிப் பிரதேசசபை அறிவிப்பு

பரந்தன்,டிசெ.12

கால்நடைகளை கட்டாக்காலிகளாக அலையவிடுவதும் அனுமதி இன்றி மணல் அகழ்வதும் சட்டவிரோதமாகும். எனவே, இவ்விரு நடவடிக்கைகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கரைச்சி பிரதேச சபை தீர்மானித்திருக்கிறது.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான கால் நடைகள் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்றன. இதனால் விவசாயிகள் உட்பட்ட பலர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைத் தவிர்க்கும் பொருட்டு ஆடு, மாடு முதலிய கால் நடைகளையும் நாய் போன்ற வளர்ப்பு மிருகங்களையும் கட்டி வளர்க்க வேண்டும்.

இவ்வாறு கட்டி வளர்க்கப்படாது வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகள் கரைச்சி பிரதேச சபையினால் பிடிக்கப்படும்.

அதேவேளை- இப்பகுதிகளில் சட்ட விரோதமாக மணல் அகழுதல், கல் அகழுதல் என்பனவும் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக புகையிரதப்பாதை அமைந்துள்ள இடங்களிலும், ஏனைய பொது இடங்களிலும் உள்ள கற்களை சட்டவிரோதமாக ஏற்றிச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு மணல், கல் என்பவற்றை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படுவதுடன், மணல், கல் என்பன பறிமுதல் செய்யப்பட்டு உரிய தரப்பின் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது (த-6-352)

# CHRISTMAS OFFER FROM MOBITEL

**Total Incoming Free PKG**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 9.50 | 5.00 |
| In coming | Total Free | |
| M to M(out going) | 5.00 | 4.00 |

இச்சலுகை 19th Dec மட்டுமே---

**Pre paid Card**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 10.00 | 6.00 |
| In coming | 6.00 (1st 2min free) | Tottaly Free |

Without Commitment | Mobitel | Nominated any Four numbers out going 5/=

All Phones Sales With 1 Year Warranty | 412, Hospital Road, Jaffna. T.P:021 222 2031



# தமிழீழ வைப்பகம்

## அறிவித்தல்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது *01.10.2003 - 31.03.2004* ஆம் நாள் வரையான காலப்பகுதியிலும் (ஒரு வருட கால் அடகுக் கடன் சேவை), *ெ..07.2004 - 31.12.2004*ஆம் நாள் வரையான காலப்பகுதியிலும் (06 மாத கால அடகுக் கடன் சேவை) அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு தங்கப் பொருள்களைத் தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே, உரியவர்கள் 26.12.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு தங்கப் பொருள்களை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேலாளர்,**
ஆளுகைப் பகுதி,
நடுவட்பணியகம்,
தமிழீழ வைப்பகம். (சி/46736)(24-11-46)



# சர்வதேச அங்கீகாரம் பெற்ற கொம்ப்யூட்டர் பாடநெறிகள்



ISO 9001 : 2000 சர்வதேச தர கழகத்தால் சிறப்பு சான்றிதழ் அளிக்கப்பட்ட CSC (India) உயர்கல்வி கல்லூரி வழங்கும் டிப்ளோமா பாடநெறிகள்

| Diploma Courses | Duration |
|---|---|
| Honours Diploma in Computer Application | 1 Year |
| Diploma in Office Automation | 5 months |
| Diploma in Advanced Software Technology | 5 months |
| Diploma in Internet & Web Technology | 4 months |
| Dioploma in Web Design & Development | 4 months |
| Diploma in Hardware & Networking | 4 months |
| Diploma in Computerised Accounting | 3 months |
| Diploma in PC Professional | 4 months |

*FREE COURSE MATERIAL*

CSC COMPUTER EDUCATION
ISO 9001 : 2000 Certified Education

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

கற்கைநெறிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கு,

101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196


## 46 பட்டதாரிகள் நியமனம்

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன்கீழ் இயங்கி வரும் வைத்திய நிறுவனங்களில் 46 பட்டதாரிகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதே நேரத்தில் கைதடியில் இயங்கி வரும் ஆயுர்வேத நிறுவனத்தில் 11 பட்டதாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகவும் கடமையாற்றி வருகிறார்கள் என்று யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (3-51)

## சென். ஜேம்ஸின் பரிசுத்தினம்

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசுத்தினம் வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

யாழ். மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் வண. பிதா ஜோசப் ஜோண் மௌலிஸ் அடிகளார் முதன்மை விருந்தினராகவும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் யூ.சகாயராஜா, குருநகர் சிறகுவலை கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.கிறிஸ்துராஜா, குருநகர் இழுவை இறால் சங்கத் தலைவர் பி.எ. கிறேசியஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.(3-51)

## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 24ஆம், 26ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (117)


# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் STRONG PLACES கருத்திட்டம்

UNDP

பதவி வெற்றிடம்: *சமூக ஊக்குவிப்பாளர் (04)*
1. பருத்தித்துறை 2. மருதங்கேணி
3. தீவகம் 4. வலிகாமம்

கடமை நிறுவனம்: **ஊற்று நிறுவனம் அல்வாய் கிழக்கு, அல்வாய்**

ஒப்பந்த காலம்: *டிசெம்பர் 2005இலிருந்து 08 மாதங்கள்*

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**
- கல்வித் தகைமை க.பொ.த. உயர்தரத்தில் 3 சித்திகள் இருத்தல் வேண்டும்.
- அடிப்படை நிதி, நிர்வாக முகாமைத்துவ அறிவு
- தமிழ் மொழிகளில் நன்கு எழுதும், நன்கு பேசும் திறமை அத்தியாவசியமானது. அடிப்படை ஆங்கில அறிவு விரும்பப்படுகிறது.
- அடிப்படை சமூக அபிவிருத்தி வேலைகளில் அனுபவம் தேவை.
- சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**துறைசார் அனுபவம்:**
விண்ணப்பதாரர் சமூக அடிப்படை அமைப்புடனும் சமூக அடிமட்டத்திலும் சேவையில் ஈடுபட்ட அனுபவம் கொண்டவராகவும் ஒதுக்கப்பட்ட குழுக்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்காக நெருக்கமாக அவர்களுடன் வேலை செய்த அனுபவம் கொண்டவராகவும் இருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

பெண்களுக்குச் சம சந்தர்ப்பம் வழங்கும் வகையிலும் தெரிவு நடைபெறும்.

**விண்ணப்பிக்கும் முறை:**
தகுதியான விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை முழுமையான சுயவிவரக் கோவையுடன் (இரண்டுஉறவினர் அல்லாத சிபார்சு செய்யக்கூடிய இருவரின் பெயர் விவரங்களுடன்) இணைத்து 19.12.2005 (திங்கள்) திகதிக்கு முன்னதாக நேரில் / தபாலில் **மாவட்ட உதவி அதிகாரி, UNDP., 121 A, கோயில் வீதி, யாழ்ப்பாணம்** என்ற விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**(தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் மட்டும் தொடர்புகொள்ளப்படுவர்)**
(43863) (24-11-46)



# BECOME A DOCTOR

MD (Doctor of Medicine)

**KURSK STATE MEDICAL UNIVERSITY RUSSIA**

உலகத்தரம் வாய்ந்த, ரஷ்யாவின் முதன்மையானதும் 2004ஆம் ஆண்டிற்கான ரஷ்யாவின் அதிசிறந்த பல்கலைக்கழகத்திற்கான தங்கப்பதக்கத்தைப் பெற்ற ஒரேயொரு மெடிக்கல், யூனிவேர்சிட்டி, உலக சுகாதார நிறுவனம் (WHO), இலங்கை மருத்துவக் கவுன்சில் (SLMC), பிரித்தானிய மருத்துவக் கவுன்சில் (BMC) போன்ற 64 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**முழு ஆங்கில மொழி மூல கற்கை நெறி - 6 வருடங்கள்**

A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்
O/L மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்

**ஆரம்ப மருத்துவக் கற்கைநெறிகள் இலவசமாக யாழ்ப்பாணத்தில் கற்பிக்கப்படும்**

தூரப்பிரயாணங்கள், சிரமங்கள், ஏமாற்றங்கள், கட்டணக் குளறுபடிகள், பிள்ளைகளைப்பற்றிய பயம், பணம் அனுப்பவும் மற்றும் பாதுகாப்பு பற்றிய கவலைகளைத் தவிர்த்துக்கொள்ள இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

**SPOT ADMISSION**

M.மயிலாஷன்
(யாழ்.மருத்துவ பீட மாணவன்)
"இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்",
இல:- 02, திருவள்ளுவர் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0714 068575
Email: ksmu@sltnet.lk
www.ksmu.info.

Kursk State Medical University,
3, Karl Marx, Street,
KURSK 305041, RUSSIA.
Tel.: +7-910-3187372
Fax: +7-0712-513079

(2005/2006 கல்வி ஆண்டிற்கான 5 ஆசனப்பதிவுகளே எம்மிடமுண்டு)

- Engineering, B.Sc, M.Sc, Ph.Dip. offerd By KURSK STATE TECHNICAL UNIVERSITY, RUSSIA
- English & Russian Language Courses
- வேலை வாய்ப்புக்காகவோ அல்லது மேற்படிப்புக்காகவோ 40 இற்கு மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதியை வழங்குகிறது.

Contact:
**M.Mylashan**
**0714068575** (43859)(26.11.46.24)

## வடமராட்சி வெள்ள நிலைவரம்

படங்கள்: சுந்தரலிங்கம்


பொலிகண்டி, சின்னாவளை தற்காலிக முகாம்...


வெள்ளத்தால் வல்வை நீச்சல் தடாகக் கட்டடம் தகர்ந்து நீர் வெளியேறுகிறது


மழையால் வதிரியில் வீடொன்றின் சுவர் வீழ்ந்துள்ளது.



இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ள மக்கள்.


வல்லையில் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காட்சி...


வல்வைப் பாடசாலை ஒன்றின் வளாகத்தில் வெள்ளம்.




நேற்றுமுன்தினம் வீசிய புயல் காற்றினால் தெல்லிப்பழை, கட்டுவன் பகுதிகளிலுள்ள வாழைமரங்கள் குலைகளுடன் பாறி விழுந்துள்ளதையும், உடுவில் ஆலடியில் வெள்ளத்தால் மூடியுள்ள அப்பகுதி பிரதான வீதியூடாக மக்கள் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)


கைதடி, ஊரியான் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீடொன்றைப் படத்தில் காணலாம்.
(படம்: கைதடிச் செய்தியாளர்)

# மழையால் பொன்னாலை பாலத்துக்குப் பாரிய சேதம் காரைநகருக்கான போக்குவரத்துத் தடைப்படும் நிலை

நேற்றுமுன்தினம் பெய்த பலத்தமழை புயல் காற்றை அடுத்து காரைநகர் - பொன்னாலைப் பாலமும் அதனோடு இணைந்த வீதியும் பலத்த சேதமடைந்துள்ளன. இதனால் காரைநகர் பகுதிக்கான போக்குவரத்து தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பிரதான வீதியில் உள்ள பாலங்களில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதுடன், வீதியின் இருமருங்கும் கடலினால் அரிக்கப்பட்டும் உள்ளன. இதனால் வாகனங்கள் எதிர் எதிரே வழிவிட்டுச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காரைநகர் - பொன்னாலை பிரதான வீதியையும் அதனோடு இணைந்த ஒன்பது பாலங்களையும் விரைவில் புனரமைக்காவிடின் காரைநகருக்கான தரைவழிப் போக்குவரத்து விரைவில் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை - காரைநகர் பிரதான வீதியில் -பழைய கண்டி சந்தியில் உள்ள மதகு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாது பாரிய சேதமடைந்த நிலையில் உள்ளது. அந்த மதகிற்கு மேல் பழைய தகரம் ஒன்று இடப்பட்டுள்ளது. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டுவருவதுடன், இப் பகுதியில் மழைநீரும் பெருமளவில் தேங்கியுள்ளது. (எ-73)

# தொடர்ந்து பெய்த மழையால் மீண்டும் வெள்ளக் காடானது ஊரியான் கிராமம்

நேற்றுமுன்தினம் பெய்த பெரும் மழையால் கைதடி ஊரியான் பகுதி மீண்டும் வெள்ளக் காடாகியுள்ளது.

இதனால், அங்கு வசிக்கும் மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அன்றையதினம் அதிகாலை தொடக்கம் மாலை வரை பெய்த தொடர்மழையால் அப்பகுதியிலுள்ள வீடுகள் பலவற்றுக்குள் வெள்ளம் புகுந்ததுடன், வீட்டுச் சுவர்களும் பாறி வீழ்ந்துள்ளன. சில இடங்களில் கடும் காற்றினால் வீட்டுக் கூரைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதனால், பெரும் சிரமத்துக்கு உள்ளான இப்பகுதி மக்கள் அப்பகுதியிலுள்ள பொதுக் கட்டடம் ஒன்றில் தங்கியுள்ளனர்.

இருபது குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில்-நேற்றுக்காலை இப்பகுதிக்குச் சென்ற கைதடி மேற்கு கிராமசேவையாளர் எஸ்.செல்வராஜா பொதுக்கட்டடத்தில் தங்கியுள்ளவர்களுக்கு காலை உணவை வழங்கியுள்ளதுடன், தொடர்ந்தும் உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்தார். அப்பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையமும் இந்த மக்களுக்கான அத்தியாவசிய உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இதேவேளை- அன்றையதினம் கைதடிப் பகுதியில் வீசிய புயல் காற்றினால் கைதடிப் பகுதியிலுள்ள வாழைத் தோட்டங்களில் நின்ற நூற்றுக்கணக்கான வாழைமரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. (எ-75)

# வலி. கிழக்கு வாழைத்தோட்டங்களில் புயல் காற்றினால் பெரும் அழிவுகள்

அச்சுவேலி,டிசெ.12

நேற்றுமுன்தினம் பெய்த மழை, வீசிய புயல்காற்று காரணமாக வாழைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மழை வெள்ளத்தினாலும், திடீரென வீசிய புயல் காற்றினாலும் வாழை மரங்கள் முறிந்தும், அடியோடு புரண்டும் உள்ளன.

பெரும்பாலும் வலி.கிழக்கு நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், நவக்கிரி, அச்சுவேலிப் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களே பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

சேதமடைந்த வாழைத்தோட்ட உரிமையாளர்கள் தமக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நிவாரணம் வழங்கவேண்டும் என விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (எ-73)

# கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்துக்கு முதல் தடவையாக சட்டத்தரணி நியமனம்

அரியாலை,டிசெ.12

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு முதற் தடவையாக சட்டத்தரணி ஒருவர் நியமனம் பெற்றுள்ளார்.

செல்வி எஸ்.துஷாந்தி என்பவரே இவ்வாறு கூட்டுறவுத் திணைக்களத்தில் சட்டத்தரணியாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள சட்டத்தரணி நியமனம் உதவும் என கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-17)

# ஆழிப்பேரலை பாதித்த கூட்டுறவு அமைப்புகளுக்கு நிவாரண உதவி வழங்க ரூ.18 லட்சம் நிதி ஒதுக்கீடு

அரியாலை,டிசெ.12

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபை நிவாரண உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கென 18 லட்சம் ரூபாவை மேற்படி சபை ஒதுக்கீடு செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

அத்துடன், கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவி வழங்குவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை வவுனியாவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்படி சபை மேற்கொண்டுவருவதாகவும்- கூறப்பட்டது.(எ-17)

# கஷ்ரப் பிரதேச பாடசாலைகள் கல்வி அமைச்சால் பிரகடனம்

அச்சுவேலி,டிசெ.12

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச்சேர்ந்த மூன்று பாடசாலைகள் அதிகஷ்ரப் பிரதேசப் பாடசாலைகளாகவும், நான்கு பாடசாலைகள் கஷ்ரப்பிரதேசப் பாடசாலைகளாகவும் கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம், சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, இருபாலை கிழக்கு சீ.சீ.த.க.பாடசாலை ஆகிய மூன்றும் அதிகஷ்ரப் பிரதேச பாடசாலைகளாகவும் - நவக்கிரி அமெரிக்கன் மிசன் பாடசாலை, புத்தகலட்டி ஸ்ரீவிஸ்னுவித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயம், கோப்பாய் கந்தவேள் வித்தியாலயம் ஆகிய நான்கும் கஷ்ரப் பிரதேசப் பாடசாலைகளாகவும் கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளன.

மேற்படி ஏழு பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்ரப் பிரதேச, கஷ்ரப்பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், வசதிகள் வழங்கப்படவுள்ளன. (எ-11)

## ஆளுமை விருத்திப் பயிற்சி நெறி

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச அலுவலர்களுக்கான ஆளுமை விருத்தி தொடர்பான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (எ-75)


### கொரிய நாட்டு பயணம் வெற்றிபெற வாழ்த்துக்கள்



கலாநிதி
**ந.யோகராஜன்**
(அதிபர், பிரதிபிராந்திய பணிப்பாளர்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி தொழில்நுட்பவியல் கல்வியைத் தரமுயர்த்தப்படுவதற்காகவும் அடுத்த ஆரம்ப நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காகவும், நிர்வாக முறைமைகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கொரிய அரசின் அழைப்பை ஏற்றுப் பயணமாகும் பணிப்பாளர் நாயகம், அதிபர், உபஅதிபர் அடங்கிய குழுவினர் விஜயம் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

**ஊழியர்கள்,** (43884)(54-26-11-46)
**தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்.**

## MATHS CENTRE NELLIADY

*தரம் 5 முதல் O/L வரை*
*ஆரம்பம் : 14-12-2005*
*புதன் பி.ப. 3.15 (ப.நே)*
(சி/46700)

### சர்வதேச உயர்கல்விக்கான வழிகாட்டற் கருத்தரங்கு

சர்வதேசதரம் வாய்ந்த பட்டக் கல்விகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்று எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இடம் : IIS பிரதான மண்டபம்
காலம் : 15.12.2005 வியாழக்கிழமை காலை 10..00 மணி

**BIT, NCC**
போன்ற கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகைகள் வழங்கப்படவுள்ளன

மேலதிக விபரங்களுக்கு :

IIS CITY CAMPUS
# 181, Navalar Road,
Jaffna.
T.P: 021 222 8060

## துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப்பிரச்சினைகள், வெளிநாடு செல்லத் தடை, தொழிலில் முன்னேற்ற மின்மை, கல்வியில் முன்னேற்ற மின்மை, தீராத நோய் தீர அருள் வாக்குக் கூறப்படும். கொழும்பு - 6 பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான நாகபூசணி அம்மன் ஆலயத்திலிருந்து வந்த ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை முதல் 14.12.2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூறவுள்ளார்.

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:**
**ஞானவைரவர் ஆலயம்**
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(43893) (54-26-11-46)


## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை செந்திவேல்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மில் ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை செந்திவேல் அவர்கள் 09-12-2005 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை- பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் தங்கேஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும் கௌரிமலரின் (நீர்வேலி) சகோதரனும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பாலசிங்கம் மற்றும் பத்மாதேவி (மல்லாகம்), செல்வராணி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13-12-2005) செவ்வாய்க்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பரமேஸ்வரி (மாமி),**
**கௌரிமலர் (சகோதரி),**
**பத்மாதேவி(மைத்துனி)**

*மில் ஒழுங்கை,*
*மல்லாகம்.* (43895)(26-11-46)

### *சின்னத்தம்பி சண்முகம்*

(முன்னாள் உரிமையாளர் - பரந்தன் அம்பாள் கபே )

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகம் நேற்று (11-12-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, நகுலேஸ்வரன், சங்கரப்பிள்ளை (டிரக்ரர் உரிமையாளர்), சாந்தினி, சாந்தமலர்(சுவிஸ்), நேசமலர் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினராசா (மயூரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சிவானந்தன் (E.S.P.கொழும்பு), சிவயோகநாதன்(சுவிஸ்),சிவச்செல்வன்(லண்டன்), சந்திரமலர், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஜா, தர்சன், தர்சிகா, நளாயினி, நசினி, சசிராஜ், பகிரதன், பவித்திரா, பவனராஜ், பவன் (சுவிஸ்), யுகேன், வோஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை காலை 9மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை,களபூமி,
காரைநகர். (43890)(26-11-46)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

### *திருமதி வைரமுத்து பவளம்*



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து பவளம் 9-12-2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதி வைரமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லர்-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், சந்திரசேகரம் (கிராம அலுவலர் கந்தர்மடம் வட மேற்கு- J/102), குணநாயகம் (கனடா), வேதநாயகம் (கனடா) கருணாவதி, புனிதநாயகம் (கனடா), மோகனதாஸ் (கனடா), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்.

ச.ரஞ்சிதாதேவி (லங்கா சிமெந்து லிமிட்டெட்.), கு.குகேஸ்வரி (கனடா), வே.திலகேஸ்வரி (கனடா), வ.வேலாயுதம் (உரிமையாளர் கதிரவன் ஹ்ட்வேக் நிலையம்), பு.சசிகலா (கனடா), மோ.உமா(கனடா), தே.சேகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ரீபசேகரம் (பழைய மாணவன் கொக்குவில் இந்துக் கல்லூரி), நிறஞ்சினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), துவாரகா(கனடா), கு.கௌசிகன் (கனடா), வே.திரியம்பதி(கனடா), வே.சஞ்சீபன்(கனடா), வே.ரயீபன்(கனடா), வே.சுகிர்தினி(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), வே.அயலக்சன்(யாழ்.இந்துக் கல்லூரி), பு.இலக்கியா(கனடா), பு.இகலிகா(கனடா), சே.மிலானி(லண்டன்), சே.கௌசல்யா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கி.நல்லம்மா, செ.செல்வரட்ணம் (செல்வா இலக்கறிக்கல், திருநெல்வேலி), ம.சிவனேஸ்வரி(கனடா), காலஞ்சென்றவர்களான செ.காசிநாதர், செ.அருளம்பலம் மற்றும் செ.கனகசபை (யாழ்.பல்கலைக்கழகம்), கு.யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-12-2005) திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கோண்டாவில் வடக்கு "சுகுண பவனம்" இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு, கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"சுகுண பவனம்"**
**கோண்டாவில் வடக்கு.** (43889)(26-11-46)

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**






## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் பாக்கியம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதி, மணியகிரியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாக்கியம் 08-12-2005 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A.K.சுப்பிரமணியம் (இளைப்பாறிய லிகிதர், பெருஞ்சாலைத் திணைக்களம் ) அவர்களின் அன்பு மனைவியும், இன்பமலர் (கனடா), செல்வமலர் (கொழும்பு), அரியமலர்(கொழும்பு), முருகதாஸ் (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன இலாகா , லண்டன்), இந்திர ஜோதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சபாரத்தினம் (இளைப்பாறிய R.M.P), சித்திவிநாயகப்பிரகாசம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), ஜெயஒளிபவன் (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற ஏழாலையைச் சேர்ந்த சுசீலா, சிறீசிவபாலசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஜீவகலா, சிவராஜன், நிறஞ்சலா, ஜெயராஜன், ஹம்சலா, சர்மிளா, சுபாங்கினி வினோதினி தபோதினி பிரபாகினி, ரவிராஜ், ரஜனி, பிரதாபன், மைதிலி, ஹிரஹரன், குறிஞ்சிக்குமரன், காயத்ரி பிரசாந், நிரோசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-12-2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.** (43887)(26-11-46)

தகவல்:
**A.K.S.முருகதாஸ்** *(மகன்)*

மயம்

# லவர், தெய்வீகப் பெருந்தகை

# ம்பி ஐயா அவர்களின்

# மாதி



**சமாதியில்:**

தாரண வருடம் கார்த்திகைத் திங்கள்

11-12-2005

## முதுமையிலும் தன்பணி தொடர்ந்த தர்மவான்

சொல்லாலும், செயலாலும் திருவருள் நிறைந்த தெய்வீக வாழ்வு வாழ்ந்தவர் அருட்கவி ஐயா அவர்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அவரது ஆத்மீகத் தொடர்பு எனக்குக் கிடைத்தது. கணீர் என்ற குரலில் அவர் ஆற்றிய தெய்வீக சொற்பொழிவுகள் எம்நெஞ்சில் நிறைந்திருக்கின்றன.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியின் திருக்கோயில் வாசலில் அவர் ஆற்றிய அருள் உரைகள் அற்புதம் நிறைந்தவை. அம்பாள் மீது அவர் பாடிய திருவூஞ்சல் பாடல்கள் அருட் சுவையுடையவை. முதுமையிலும் தன்பணி தொடர்ந்த தர்மவான் அவர்.

சகோதரி என்று அவர் அழைக்கும் வார்த்தைகள் கேட்டு ஆனந்தம் அடைவேன். எத்தனை ஆலய விழாக்கள், அரங்குகள், சபைகளில் யானும் அவருடன் உரையாற்றிய நாள்களை மீள நினைத்துப் பார்க்கிறேன்.

எல்லாம் இறையருள். அன்னாரின் வாழ்வு போற்றுதலுக்குரியது சமாதி நிலையில் இருந்து எல்லோருக்கும் அருட்கவி ஐயா ஆறுதல் தரவேண்டும் என அம்பாளை இறைஞ்சி அமைகின்றேன்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
தலைவர்.
ஸ்ரீ.துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## சமாதானத்துக்காக பிரார்த்தனை நடத்தியவர்

அளவெட்டி நாகேஸ்வரம் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் இந்து சமயப் பேரவைத் தலைவரும் ஆத்மீகப் பெருந்தகையுமான சைவப் பெரியார் அருட் கவி சீனியர் விநாசித்தம்பி அவர்கள் தனது (03.11.1923) 83ஆவது வயதில் இன்று (ஞாயிறு) அதிகாலை 3 மணியளவில் மஹா சமாதி அடைந்துள்ளார்.

அன்னார் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய அருட்தொண்டுகள் அளப்பரியன. இவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை பழந்தமிழ் மரபுக் கவிகளில் ஆக்கிவெளியிட்டுள்ளார். இந்த நாட்டில் சமாதானம் மலரவேண்டும் என்ற நோக்கில் பல்வேறு பிரார்த்தனைகளை நடத்தியும் அதிற் பங்குகொண்டுமுள்ளார்.

தியான பாவனைகள் மூலம் இறைவனைத் சதா தரிசித்து அபரிமிதமான அருள் வளத்தைத் தன்னகத்தே கொண்டு வாழ்ந்த இவர், மக்களின் குறைகளைத் தீர்த்து அவர்களைத் துன்பத்திலிருந்து விடுபட அருளாச்சி வழங்கி வந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம் இவருக்கு 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவரின் பெருமையை உணர்ந்த பல நிறுவனங்கள் பல்வேறு விருதுகளையும் கௌரவங்களையும் வழங்கியுள்ளன.

நல்லூர் கந்தசாமி கோயில் முன்னாள் அறங்காவலர் ஸ்ரீ சண்முகதாச மாப்பாண முதலியார் இவருக்கு அருட்கவி எனும் அருள் விருதை வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமை பல படைத்த அருட்கவி ஐயாவின் பணியைத் தொடர்வதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

சி.சக்திகிரீவன்,
செயலாளர்.
இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

## அருட்கவியின் வாழ்வில்......

- 1999 முதல் இந்துசமயப் பேரவைத் தலைவர்.
- யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் - 2003 - 2005.
- சோதிட, வைத்தியப் பணி: பரம்பரை ரீதியாக கற்று செயற்படுத்தினார்.
- நாடகநடிகராக இளமையில்: வதாங்கி, சந்திரமதி, கண்ணகி, மானமுள்ள மனிதன், நந்தனார் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.
- கட்டட நிலையம் எடுத்தல்: வாஸ்து சாஸ்திரம் கற்று வல்லவராக விளங்கினார்.
- விருதுகள் கௌரவங்கள்
  யாழ். பல்கலைக்கழகத்தால் M.A. பட்டம் வழங்கப்பட்டது.
  சர்வதேசப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.
  அகில இலங்கை இந்துமா மன்றத்தால் சிவநெறிச் சீராளர் விருது.
  அகில இலங்கைக் கம்பன் கழகத்தால் மூதறிஞர் விருது.

ா ரேடேஸ்
ழ்ப்பாணம்.

அசோகா நகைமாடம்
யாழ்ப்பாணம்.

ா நகைமாடம்
ழ்ப்பாணம்.

கணேசன் ஸ்ரோஸ்
யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

மகா கணபதீஸ்வரக் குருக்கள் பிரபாகரன் என்பவருடைய தே.அ.அட்டை (740623354V) 01-12-2005 அன்று ஊர்காவற்றுறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 5851 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். (43876)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). (46278)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி, உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். தை மாதம் Broiler கோழிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். (43785)

## வான் விற்பனைக்கு

54 தொடர் இலக்கமுள்ள வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 13/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No.: 021 4590102 (43876)

## நவாலியில் நான்கு வீதிகள் அடுத்த ஆண்டு திருத்தம்

நவாலி,டிசெ.12

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் இரண்டின் கீழ் அடுத்த ஆண்டு நவாலியிலுள்ள சின்னப்பா வீதி, பிரசாத் வீதி, சம்மந்தப்பிள்ளையார் வீதி, ஞான வைரவர் வீதி என்பன புனரமைப்புச்செய்யப்படவுள்ளன. (எ-100)

## சமைத்த உணவு

மழையால் இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் தங்கியிருக்கும் மக்களுக்கு ஆனைக்கோட்டை மகாஜனா ச.ச. நிலையத்தினர் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிய உலர் உணவுப் பொருள்களைப் பயன்படுத்தி சமையல் செய்து வழங்கி வருகின்றனர். (எ-100)

## PERSONAL CALSS

பின்வரும் பாடங்கள் தகுதியான ஆசிரியர்களால் பிரத்தியேகமாகவும், குழுக்களிற்கும் வீட்டில் கற்பிக்கப்படும்.

கணக்கியல்: க.பொ.த. (உ/த)
அளவையியல்: க.பொ.த. (உ/த)
கணிதம்: தரம் 8 முதல் க.பொ.த. (சா/த) வரை
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
சமூகக்கல்வி: தரம் 9 முதல் க.பொ.த. (சா/த) வரை
தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0777 060502,
(43883)(26.11.14.24) 0777 238597

## மீண்டும் குறைந்த கட்டணத்தில்

## சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, டென்மார்க், இத்தாலி, லண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு ஒரே கட்டணம். கட்டணம் K.G 1300/= மட்டும்.

ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும். மேலதிக கட்டணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட விலாசத்தில் மூன்று நாள்களில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் உறவினர்களுக்கு அனுப்பவேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை எமது ஸ்தாபனம் மூலம் அனுப்பி வைக்கலாம்.

தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVELS &TOURS**

32 1/2 கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பணம்.
தொலைபேசி: 021 222 3237, 0777 328219
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்) (C/46734)

குறிப்பு:
வடமராட்சி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது பொதிகள் சேவையை பின்வரும் எமது இணை ஸ்தாபனங்களுக்கு விஸ்தரித்துள்ளோம்.

| | |
|---|---|
| வல்வெட்டித்துறை<br>அமுதம் பில்டோர்ஸ்<br>கிழக்கு றோட்,வல்வெட்டித்துறை.<br>தொலைபேசி: 021 226 3575 | பருத்தித்துறை<br>நிதேஸ் என்றபிறைஸ்<br>பிரதான வீதி,பருத்தித்துறை.<br>தொலைபேசி :021 2264224 |
| நெல்லியடி<br>நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்<br>152, மெயின் வீதி, நெல்லியடி.<br>தொலைபேசி: 021 226 4197 | அச்சுவேலி<br>சபா தொலைத் தொடர்பு நிலையம்<br>பிரதான வீதி, அச்சுவேலி.<br>தொலைபேசி :021 4591787 |

## WE NEED

*Chamber of Commerce and Industries of Yarlpanam.*

**PROJECT OFFICER.**

- Academic Qualification:- Degree holder with work ing knowlede of English
- Job Specification:- Mainly the Identification of Projects, Reports Writing & Project Implementaion.
- Professional Qualification:
  - I. Computer Knowledge in MS office
  - II. If not a Degree holder, Should have min. of 10 years experience in related field
  - III. Motor Bike license is very essentual
- Salary: Negotiable.

Please send your CV to:
President, CCIY,
601,Navalar Road, Jaffna.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 10 - 1955 மறைவு 23 - 11 - 2004

அமரர் நடேசர் ராஜா

திதி: 12.12.2005

உங்களைப் பிரிந்து ஓராண்டு தவியாய்த் தவித்தோம்
உறங்காது நெஞ்சமெல்லாம்
துயர்வந்து வாட்டுதையா தயங்காது நீங்கள்
காட்டிய பாசமெல்லாம் தந்துவிட
நீங்கள் இன்றி வாடுகின்றோம் அப்பா என்று அழைக்க
எங்கள் அருகில் நீங்கள் இல்லை.
நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (43480)(11.14.24)

| | |
|---|---|
| Schlehen Weg 11,<br>73230 Kirchheim - Teck<br>T.P.: 0049702145888 | உங்கள் நினைவால் வாடும்:<br>மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்<br>ஜேர்மனி. |

# கேள்விப் பத்திர அறிவித்தல்

சேவா லங்கா மன்றம் ஒரு தேசிய அரச சார்பற்ற நிறுவனமாகக் கடந்த 14 வருடங்களாகத் தகுதி காண் வறிய மக்களுக்கும் மற்றும் நாட்டிலுள்ள இயற்கை அனர்த்தம் அல்லது இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஐரோப்பிய சமூக மனிதாபிமான உதவித்திட்டத்தின் (E.C.H.O.) நிதி உதவியுடன் ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவனத்தின் (G.A.A.) ஒத்துழைப்புடன் சேவை செய்கிறது.

முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கீழ்வரும் வழங்கல்களுக்கு மார்கழி 21ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை கோரப்பட்டு, உடனடியாகக் கேள்விப் பதிரங்கள் திறக்கப்படும்.

அத்தருணத்திற் கேள்வி கோருபவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி அது நடைபெறும் போது சமுகமளிக்கவேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் பொருள்களுக்கும் தேவையான கேள்விப் பத்திரங்களைக் கீழ்க்காணும் நிலையங்களில் பணத்தைக் கொடுத்து காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணிவரை கிழமை நாள்களில் டிசெம்பர் 12ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 20ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளமுடியும்.

| | |
|---|---|
| 01. | சேவா லங்கா பிராந்திய அலுவலகம், கண்டி வீதி, பரந்தன். |
| 02. | பணிப்பாளர்கள் கள அலுவலகம், சேவா லங்கா மன்றம், 51, வைரவர் கோயில் வீதி, வவுனியா. |
| 03. | சேவா லங்கா மாவட்ட அலுவலகம், இல.250, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 04. | சேவா லங்கா மாவட்ட அலுவலகம், இல.268/1, மத்திய வீதி, திருகோணமலை. |
| 05. | சேவா லங்கா மாவட்ட அலுவலகம், இல.64, மூர் வீதி, மன்னார். |

இத்திட்டத்தில் கூறப்பட்ட பொருள்களின் அளவு கீழ் வருமாறு:-

| | | |
|---|---|---|
| மரக்கறி விதைகள் (20g பை) | புடோலங்காய், வெண்டிக்காய், முட்டைக்கோவா, கறிமிளகாய், கத்தரி, சிறகு அவரை, கீரை - ஒவ்வொன்றும் 471 பைகள். | ரூ. 250.00 |
| நெல் | 832 புசல் | ரூ. 250.00 |
| உரம் | V1, யூரியா, ரி.டி.எம். - 20.800 கிலோ | ரூ. 500.90 |
| கிருமிநாசினி | நோமினி (0.1 லீற்.) 42 போத்தல் | ரூ. 250.00 |
| நீண்டகாலப் பயிர்கள் | தென்னை 2355 தனி, மா, பலா, - ஒவ்வொன்றும் 492 தனி, கறிமுருங்கை, கோவா, தேசி - ஒவ்வொன்றும் 471 தனி | ரூ. 250.00 |
| விவசாய உபகரணங்கள் | மண்வெட்டி, குப்பைவாரி - ஒவ்வொன்றும் 832 தனி காட்டுக்கத்தி, கோடரி, அலவாங்கு - ஒவ்வொன்றும் 416 தனி, தெளிகருவி, 84 தனி, அரிவாள் - 1248 தனி | ரூ. 500.00 |
| சீமெந்து பை (50 கி.பை) | 14157 பை | ரூ. 500.00 |
| கிடுகு | 158150 சோடி | ரூ. 250.00 |
| மெற்றோ சீற் | 6896 தனி | ரூ. 250.00 |
| 1/4' ஓ.எம். றொட்ஸ் | 14330.75 சட்டம் (Bar) | ரூ. 250.00 |
| கல் | 3/4' - 265.75 கியூப், 1' 1 1/2' - 10.75 கியூப் | ரூ. 250.00 |
| மண் | மணல் 246 கியூப், கட்டட மணல் - 686.5 கியூப் | ரூ. 250.00 |
| நிலையுடனான கதவு | 657 தனி | ரூ. 250.00 |
| சமையல் பாத்திரங்கள் | 12' அலுமினியம் பானை, 10 லீற். பிளாஸ்ரிக் வாளி, 6'x4' இந்தியன்பாய் - ஒவ்வொன்றும் 471 தனி, லாம்பு - 942 தனி, 10' அலுமினியம் சோஸ்பான், 8 செ.மீற். சில்வர்க் கப், 22 செ.மீற். சில்வர் பிளேற் - ஒவ்வொன்றும் 2355 தனி. | ரூ. 500.00 |
| கழிப்பறைக் கோப்பை | 226 தனி | ரூ. 500.00 |

இப்பொருள்கள் கிளிநொச்சி, மாவட்ட சேவாலங்கா மன்றத் தளங்களுக்குப் பாரம் கொடுத்தல் வேண்டும்.

தயாரிக்கப்பட்ட கேள்விகள் கொடுக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக நிர்ணயிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தில் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**1. தலைவர்,**
**கேள்விப்பத்திர சபை, பிராந்திய அலுவலகம்,சேவா லங்கா மன்றம், யாழ். வீதி, பரந்தன்.**

மேற்கூறிய சேவாலங்கா மன்றப் பிராந்திய அலுவலகம் கணக்காளர் அலுவலகத்தில் 22ஆம் திகதி மார்கழி மாதம் 2005ஆம் ஆண்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு முன் கிடைக்கும் வண்ணம் அனுப்பவும்.

இத்திகதிக்குப் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**செயலாளர்,**
**கேள்விப்பத்திர சபை, பிராந்திய அலுவலகம், சேவா லங்கா மன்றம், யாழ். வீதி, பரந்தன்.** (சி/46735) (24-14-11)

## 61ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 10 - 11 - 1977 மறைவு 13 - 10 - 2005

அமரர்

குலசிங்கம் குகதாசன் (குகா)

அறிவு சொல்கிறது இயற்கையின் நியதி இதுவென்று
ஆன்மா அழுகிறது (பேராத்மா) உங்கள் பிரிவைத் தாளாது
இதயம் கனக்கிறது எந்நாளும் ஏங்கித் தவிக்கிறது
ஈடில்லாப் பெரும் தகையோனே எங்கள் குகா!
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட - உன் நினைவலைகள்
என்றென்றும் எம் உயிருள்ளவரை எம்மோடு நிலைத்திருக்கும்!

13.10.2005 அன்று அகால மரணமடைந்த குலசிங்கம் குகதாசன் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (12.12.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நி.மு: சண்டில், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
த.மு: தொண்டைமானாறு. (43870)(54.11.14.24)

தகவல்:
கு.குருபரன் (அண்ணா)
குடும்பத்தினர்.

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24 -09-1953
மறைவு
27 - 11 - 2001

## திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி

திதி: கார்த்திகை பூர்வ துவாதசி
12.12.2005

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டுப் பிரியாது

(43903)
(18-34-12)

தகவல்:
கணவன் (அருள்ராசலிங்கம்),
தாய், சகோதரர்கள்.

குப்பிழான்,
ஏழாலை.


## 10.12.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300755788 இலிருந்து
300771760 வரை

சீட்டிழுப்பு இல. 1666

வெற்றி எண்கள்
**04 17 39 62**

சுப்பர் எண் **12**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,89,54,150/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 1,89,54,150/- | 1,89,54,150/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | - | 10,00,000/- | - |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 36 | 5,000/- | 1,80,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 397 | 1,000/- | 3,97,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,288 | 500/- | 6,44,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,739 | 40/- | 7,89,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,625 | 20/- | 3,72,500/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,80,760 | 10/- | 28,07,600/- |
| | | மொத்தம் | 24,144,810/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 24,644,810/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-

தொடர் இல. 200816922 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 14 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 300756187-3-64 |
| அனுராதபுரம் | 300762263-0-62 |
| களுத்துறை | 300760386-2-91 |
| கம்பஹா | 300765481-8-79 |
| மாத்தளை | 300761429-0-32 |

வளமான வாழ்வுக்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 736 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 09-12-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5856583-5870864 |

லக்கினம் விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்
**16 30 49 51**

ஜக்பொட் பரிசு
ரூபா. 23,99,550/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 30,99,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தம் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,13,369 | 10/- | 31,33,690/- |
| 2.இலக்கங்கள் | 28,779 | 20/- | 5,75,580/- |
| 1.இல லக்கினம் | 28,344 | 30/- | 8,50,320/- |
| 2.இல லக்கினம் | 2,606 | 100/- | 2,60,600/- |
| 3.இலக்கங்கள் | 768 | 500/- | 3,84,000/- |
| 3.இல லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 23,99,550/- | - |
| | | மொத்தம் | 60,04,190/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 70,56,440/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 70,56,440/- தொடர் இல. 4601270 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 5859789-2-51 |
| களுத்துறை | 5870777-4-76 |
| பதுளை | 5861354-2-74 |
| மட்டக்களப்பு | 5862878-6-53 |
| குருநாகல் | 5859057-5-50 |


# பிரதேச...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுத் தலைவரும் தென்மராட்சி பிரதேச செயலருமான செ.ஸ்ரீநிவாசன் நிகழ்த்தினார். வரவேற்புரையை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகக் கணக்காளர் கே.கமலேஸ்வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து புதிய பிரதேச செயலகக் கட்டடத் திறப்பு விழா மலர் வெளியிடப்பட்டது. இந்நூலின் முதற் பிரதியை யாழ்.மாவட்ட மேலதி அரச அதிபர் ஆ.சிவசுவாமி வெளியிட்டு வைக்க யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்கள பிரதி மாகாணப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் பெற்றுக் கொண்டார். நூலின் வெளியீட்டுரையினை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராசா நிகழ்த்தினார்.

இறுதியாக கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்ட பணியாளர்கள் நினைவுக் கேடயங் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(சுனாமி) பா.செந்தில் நந்தனன், செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை மற்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா உட்பட யாழ்.செயலக உயரதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக அலுவலர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் பொதுமக்கள் உட்படப் பலரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

(ஜ-6-70)


## தேவை

எமது நிறுவனத்திற்கு பெண் பணியாளர் தேவை.கல்வியங்காட்டுப் பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

நாதன்ஸ்,3/1,செங்குந்தா கட்டடம்,
கல்வியங்காடு
T.P:.077 315 2974,077 6070824

## சக்சஸ் மல்ரி ஹவுஸ்

5 ஆவது அதிர்ஷ்டலாபச்
சீட்டிழுப்பு முடிவு
இல.151
பெயர்: N.சிவநதி
முகவரி: கோகிலா மனை,
கொடிகாமம்.

புத்தூர் சந்தி,
மீசாலை.

(சி-46744)
(18-34-12)

S.M.H
உரிமையாளர்.

## தேவை

புத்தகசாலை ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு:
இல.14, பஸ் நிலைய உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(43901)
(18-17-34)

## ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், நமீதா, வடிவேல்
நடித்த
பம்பர கண்ணாலே

காட்சிநேரம்: பு.நே.
10.30, 2.30, 6.30 மட்டும்

(46404)

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்



பொதுமக்களின் வேண்டு கோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம்
10.30, 1.30,4.30, இரவு 7.30

இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு

ஷாம்,சினேகா
அபர்ணா
நடித்த
ABCD

## மனோகரா யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
சிவகாசி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா
வடிவேல் நடித்த
ஆறு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

## நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா,
வடிவேல் நடித்த
ஆணை

தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கனகரத்தினம்



(ஓய்வு பெற்ற அதிபர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, சிவன்பண்ணை வீதியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கனகரத்தினம் அவர்கள் 08.12.2005 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.12.2005)திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

95, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
0212223701

(43910)(18-34-12)

## கந்தர் பரமு

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த கந்தர் பரமு நேற்று(11.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் ரோகிணியின் (பவானி) அன்புக் கணவரும் டாக்டர் புஸ்பரட்ணம் (யாழ்.பல்கலைக்கழகம்), இரட்ணேசன் (நோர்வே), குகணேசன்(பொறியியலாளர், சிங்கப்பூர்), திருமதி புஸ்பராணி, திருமதி அருந்திராதேவி (சித்திரா), திருமதி காஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ.பரமநாதன், வே.சிவசுப்பிரமணியம் (யாழ்.பல்கலைக்கழகம்), அ.தனீஸ்வரன் (யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி பு. நளினி (ஆசிரியர், சன்மார்க்க மகா வித்தியாலயம்), திருமதி இ.வதனி, திருமதி கு.யுவரோகிணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் ப.புஸ்பரட்ணம்.

(சி-46746)(18-34-12)

## சுப்பிரமணியம் செல்லத்தம்பி

(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி பருத்தித்துறை )



துன்னாலைதெற்கு,தல்லையப்புலத்தைப் வசிப்பிடமாகக்கொண்ட செல்லத்தம்பி (செல்லச்சாமி) அவர்கள் நேற்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமைஅவரின் இல்லத்தில் நடைபெற்று,முற்பகல் 11மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வள்ளிப்பிள்ளை(மனைவி).

தல்லையப்புலம்,
கரவெட்டி. (43907)(18-34-12)

## வேலுப்பிள்ளை பொன்னையா

(பெட்டிக்கடை பொன்னையா அப்பு)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் யா/359/3,கோபால் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா அவர்கள் நேற்று(11.12.2005)ஞாயிற்றுக்கிழமை 118, பிறவுண் வீதியிலுள்ள மகனின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அசுவதியின் அன்புக் கணவரும் சரஸ்வதி,செல்வராசா,நாகேஸ்வரி,அன்னலட்சுமி,ஸ்ரீராஜா (ஸ்ரீ),தவராசா (தவம்), தனலட்சுமி,நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை,குப்புச்சாமி, பாலச்சந்திரன்,சண்முகலிங்கன்,ராதாகிருஷ்ணன், சோதிமலர் (கிளி), பரமேஸ்வரி(துபா), ரஞ்சினி ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.12.2005) திங்கட்கிழமை 118,பிறவுண் வீதியில் பி.ப.2 மணியளவில் நடைபெற்று,பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பொ.செல்வராசா,
118,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (43910)(18-34-12)

## திருமதி லத்ா சிவகுமார்



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லதா சிவகுமார் (முன்னாள் கணக்காளர், வட கிழக்கு மாகாண சபை) நேற்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் ஆனைக்கோட்டை,மானிப்பாய் காராளசிங்கம் சிவகுமார் (முன்னாள் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை ) அவர்களின் அன்பு மனைவியும் ஹரிசரவணா அவர்களின் அன்புத் தாயும் திரு.திருமதி பூ.வெற்றிவேலு(இளைப்பாறிய அதிபர், சாவச்சேரி இந்துக் கல்லூரி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி காராளசிங்கம் தம்பதியரின் மருமகளும் அசோகன் (லண்டன்), Dr.குமரன் (கனடா), ராதாகிருஸ்ணன் (அமெரிக்கா), Dr.செல்வரஜனி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.புவனேஸ்வரி (லண்டன்), Dr.வாசுகி (கனடா), தாரணி (அமெரிக்கா), Dr.முகுந்தன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ராஜ்குமார், உதயகுமார், சுமதி, வதனி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 14.12.2005 புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி வெற்றிவேலு
(இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி
இந்துக் கல்லூரி)

சிவனகம்
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(43902)(18-17)

# யாழ்ப்பாணத்தில் சில தினங்களில் படையினர் பெரும் தேடுதல் வேட்டை

## புலி உறுப்பினர்கள் தங்கியிருப்பதை நிரூபிப்பதற்காக

கொழும்பு,டிசெ.12

உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பிரதேசங்கள் அடங்கலாக யாழ்ப்பாணத்தில் பெரும் தேடுதல் நடவடிக்கை ஒன்றை அடுத்த சில தினங்களில் மேற்கொள்வதற்கு படைத் தலைமை தீர்மானித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மிகப் பெரும் எடுப்பில் இந்தத் தேடுதல் நடவடிக்கை இடம்பெறும் என்று 'லக்பிம' சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மிகவும் நுட்பமான முறையில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளைத் தேடிப் பிடிப்பதற்காகவும் -

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இரண்டு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட சக்திவாய்ந்த சுடுகலன்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்தும்-

இந்தத் தேடுதல் வேட்டையை நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் தங்கியிருக்கவில்லை என்ற உத்தரவாதத்தை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இருந்து பெற்றுக்கொண்ட பின்னர் இந்தத் தேடுதலை நடத்துவது என படைத் தலைமை தீர்மானித்துள்ளது.

- இவ்வாறு 'லக்பிம' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-206)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்தவிற்கு நெருக்கமான தேரழமைக் கட்சிகள் வழங்கிய அழுத்தம் காரணமாக இது விடயத்தில் ஜனாதிபதி கடும் அதிருப்தியை கொண்டிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. ஜனாதிபதியின் இந்த அதிருப்தியை நோர்வேத் தூதுவரிடம் ஜனாதிபதியின் செயலாளர் வெளியிடவுள்ளார்.

கடந்த வார நடுப்பகுதியில் பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு செவ்வியளித்த இலங்கை அமைதி முயற்சிகளின் விசேட பிரதிநிதியும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் இலங்கை சமாதான முயற்சிகளை சில நிபந்தனைகளுடன் நோர்வே முன்னெடுக்குமென்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

PREMISES AVAILABLE FOR RENT

Large house with extensive land in front and behind and Close to a 09 **Route** and Jaffna district secretariat for

**IMMEDIATE OCCUPATION**

N.G.00 preferred.

Please contact T.p. 0112580204

H.p. 0776148432

(43871) (25-17-34)

SAAMSTECH இன் இலவசப் பாடநெறி

15.12.2005 நடைபெற இருந்த வகுப்பு 17.12.2005. சனிக்கிழமை நடைபெறும்.

இடம்: ரிம்பர் மண்டபம்

T.P: 4591571, 2229505

841, Hospital Rd, Jaffna

233/4, Kasthuriyar Rd, Jaffna

(43885) (25-17-34)

சலுகை முடிவு

பாடசாலை மாணவர்களுக்குரிய

SPECIAL ENGLISH

இணையத்தள வடிவமைப்பு

WEB-INTERNET COURSE

முடிவுதிகதி: இன்று 12.12.2005

மேலதிக விவரம் நேற்றைய உதயனில்...

(43886) (25-17-34)

SAAMSTECH 841, Hospital Rd, 233/4, Kasthuriyar Rd.

விக்னா கல்வி நிறுவனம்

தரம் 6 தொடக்கம் O/L வரை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. சகல பாடங்களும் 12.12.2005 திங்கள் 9 மணிக்கு நடைபெறும்.

✱புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(சி/46729-12-13-33) -இயக்குநர்.

NEW SCIENCE CENTRE யாழ். நகர்

CHEMISTRY DAY CLASS

பிரிவு-I Basic, General -Mon.-Fri.8.30-10.00

பிரிவு-II ORGANIC, PHYSICAL -Mon.-Fri.10.30-12.00

பிரிவு-III Inorganic, general -Mon., Thurs.-2.30-4.00, -Tue.4-6.

இம்மாதம் நடைபெறவுள்ள 5 கருத்தரங்கில் முதலாவது கருத்தரங்கு 15.12 வியாழன் 9.30. (43898) (25-17-34)

By:- அன்பழகன் (B.sc.)

## அனுசரணைப் பணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பையும் நோர்வே முன்நிபந்தனையாகக் கோரியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நிபந்தனையை இலங்கை அரசுத் தரப்பு ஏற்பதாயின் தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை அது ஏற்றுக்கொள்ளவேண்டும். சமஷ்டி அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு பற்றி ஆலோசிப்பதற்கு இணக்கம் காணப்பட்ட ஒஸ்லோ கூட்ட றிக்கையை அரசுத் தரப்பு ஏற்கவேண்டும். இதுவெல்லாம் இன்றைய நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் அரசுக்குப் பிடிக்காத விடயங்கள்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்கப் போவதாக சூளுரைத்துள்ள அவரின் அரசு எவ்வாறு தற்போதுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை அப்படியே ஏற்பதாக இப்போது கூறமுடியும்?

அத்தோடு, யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்பதாக இப்போது அறிவித்தால், அந்த உடன்படிக்கையின்படி, உயர் பாதுகாப்பு வலயங்களை விட்டு வெளியேறும் கடப்பாட்டையும் அரசு ஏற்றுக்கொண்டாக வேண்டும். மேலும் அந்த யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி வடக்கு - கிழக்கில் உள்ள துணைப் படைகளை ஆயுதங்களைக் களைந்து அங்கிருந்த அகற்றுவதற்கும் புதிய அரசுத்தலைமை இணங்கி யாக வேண்டும். இதெல்லாம் மஹிந்தவின் அரசுக்கு இன்றைய நிலையில் சரிப்பட்டு வராத விடயங்கள் என்கின்றன விடயமறிந்த வட்டா ரங்கள். மேலும், அரசுத் தரப்புக்கு தனியாக சில நிபந்தனைகளை நோர்வே முன்வைத்திருக்கின்றது.

அனுசரணைப் பணியில் நோர்வே பக்கச் சார்பின்றி செயற்படுவதை அரசும், அரசுக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருப்பதை அக்கட்சிகள் தமது சொல் மூலமும், செயல் மூலமும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்த வேண்டும் என நோர்வே எதிர்பார்க்கின்றது. ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற - நோர்வேயின் பங்களிப்பை மோசமாக விமர்சிக்கும் - கட்சிகளைத் தமது கூட்டமைப்பில் வைத்திருக்கும் ஜனாதிபதி அத்தகைய விமர்சனங்களை அக்கட்சிகள் நிறுத்திவிட்டன என்பதை உறுதிப்படுத்துவதும் நோர்வேயின் முன்நிபந்தனைகளில் ஒன்று என்று கூறப்படுகின்றது. ஆனால், அத்தகைய உறுதிப்பாட்டில் தமது கூட்டுக் கட்சிகளிடமிருந்து ஜனாதிபதி மஹிந்த பெற்றுத் தருவது துர்லபமே என்றும் தெரிகின்றது.

இதேசமயம் - தாம் அமைதிப் பேச்சுகள் தொடர்பான அனுசரணைப் பணிக்கான விடயங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கக் கோரும்போது அவரை நேரில் சந்தித்துப் பேசி காலதாம தமின்றி முடிவெடுக்கக் கூடியதான ஒழுங்கு முறை வன்னியில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று புலிகளுக்கு நோர்வே நிபந்தனை விதித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த நிபந்தனைக்கும் புலிகள் தரப்பிலி ருந்து திட்டவட்டமான பதிலேதும் நோர்வேத் தரப்புக்கு இன்னும் கிட்டவில்லை எனக் கூறப்படுகின்றது.

எனினும், நோர்வேயின் உயர்மட்டக் குழு ஒன்று விரைவில் புலிகளின் தலைமை யைச் சந்திக்கவுள்ளது என்று கடந்த வெள்ளியன்று ஊடகங்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார். அத்தகைய சந்திப்பின்போது இவ்விவகாரம் குறித்துத் தமது நிலைப்பாட்டை புலிகளின் தலைவர் நோர்வேக்கு தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புற்ற இப்பெண் முதலில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த சமயம் நேற்றுப் பிற்பகல் பின்கதவால் வைத்தியசாலைக்குள் புகுந்த ஆயுததாரிகள் சிலர் முதலாம் வார்ட்டுக்கு வெளியே ஆயுதத்துடன காவலுக்கு நின்ற மகேஷ் ரணசிங்க என்ற பொலீஸ்காரரைச் சுட்டுக் கொன்றுவிட்டு வார்ட்டுக்குள் நுழைந்தனர்.

அங்கு மேற்படி பெண்ணுக்குக் காவலாக ஆயுதமின்றிப் பணியிலிருந்த மூன்று பெண் பொலீஸார் உட்பட நான்கு பொலீஸாரையும் விரட்டித் துரத்திய அந்த ஆயுததாரிகள், வைத்தியசாலைச் சுவருக்கு மேலாக நோயா ளியைத் தூக்கி எடுத்து வெளியில் நின்ற வானில் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து மறைந்தனர்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு இராணு வத்தினரும், அதிரடிப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்து பின்னர் விசாரணையை மேற்கொண்டனர். வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ் செழியன் சம்பவ இடத்துக்கு வருகை தந்து, மேல் விசாரணைகளை நடத்தப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-க-6-164)

## கைக்குண்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியத் தகவலொன்றையடுத்து கறுவாக் கேணி பிரதேச வீடொன்றை திடீரென சுற்றிவளைத்த இராணுவத்தினர் கைக்குண்டுடன் இந்த இளைஞரைக் கைதுசெய்துள்ளனர் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-க)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் கிளிநொச்சியில் தாம் நடத்திய பேச்சுகள் குறித்து நோர்வேத் தூதுவர் விளக்கவுள்ளாரென கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பினையடுத்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பில் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜோன் குணரட்ண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து விளக்கவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

## யாழ்.நீதிமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறைகள், பதிவாளர் அறை ஆகியவற்றில் தேடுதல் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.பின்னர் 4 மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துக்கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.இதன்போது நீதிமன்ற ஆவணங்கள் எவையும் கொள்ளையர்களால் எடுத்துச்செல்லப்படவில்லை எனவும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் குறித்து யாழ்.பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்



### முத்தமிழ் வித்தகர்

## அ.பொ.செல்லையா

தென்மராட்சி, மீசாலையைச் சேர்ந்த அதிபர் அ.பொ. செல்லையா அவர்கள் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரொரன்ரோவில் காலமானார். இவர் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் நீண்டகால உறுப்பினரும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், சமாதான நீதிவானும் ஆவார். அன்னார் கொழும்பு இசிப்பத்தான கிறீன்லன்ட்ஸ் கல்லூரி, கொழும்பு சாஹிராக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், பளை மத்திய கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகவும் 40 ஆண்டு காலம் கல்விச் சேவை புரிந்தவரும் அத்துடன் கனடாவின் தமிழ் ஊடகங்களினூடாக தனது பேச்சாலும், எழுத்தாலும் பங்களிப்பைச் சிறந்த முறையில் வழங்கி வந்தவரும், Canada Charter of Rights இனை தமிழில் மொழி பெயர்த்து, கனடிய அரசின் பாராட்டைப் பெற்றவரும் ஆவார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை விதானையார் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் யோகரத்தினத்தின் ஆருயிர்க் கணவரும் மாறன், சேரன், "தமிழன் வழிகாட்டி" செந்தி, காலஞ்சென்ற குந்தவி, கிள்ளிவளவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ருக்மணி, சுமதி, விஜிதா, துஷாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்து, ஆதிரை, மதுராந்தகன், மதுராந்தகி, ஆதவன், மீரா, சுவேதா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும்.

காலஞ்சென்ற புனிதபதி, பூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இரட்ணசபாபதி, இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் தங்கரத்தினம், செல்வரத்தினம், இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், விஜயரத்தினம், நவரத்தினம், இரத்தினம் ஆகியோர்களது மைத்துனரும் கோகிலாவதி, அம்பிகாபதி, மதுராந்தகி, தந்திவர்மன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ராஜாகோப்றேசனைச் சேர்ந்த கந்தசாமி, இளைப்பாறிய அனுராதபுர புகையிரத நிலைய அதிபர் ஊரெழுவைச் சேர்ந்த குமாரசுவாமி, சாவகச்சேரி பிரபல தொழில் அதிபர் ஏ.கே. சபாரத்தினம், கொழும்பு வரி மதிப்பீட்டுப் பரிசோதகர் கருணாகரன் ஆகியோரது சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக 10 ஆம் திகதி சனிக்கிழமையும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் 9 மணி வரை 3280, Sheppard Ave இல் (Warden & Sheppard அமைந்துள்ள Highland Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு: மாறன்: 416-568-2450, சேரன்: 416-907-9546

செந்தி: 416-917-1500/416-615-4646, கிள்ளி: 416-624-7562

(சி-46747) (25-17-34)

## சுப்பையா செல்லத்துரை

சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்லத்துரை அவர்கள் நேற்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.* (43911) (25-17-34)

தகவல்: **ஈசன், மனோகரன்** (பிள்ளைகள்)

## இராமலிங்கம் கணேஸ்வரன்

*(இளைப்பாறிய ஊழியர் - பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)*

அளவெட்டி தெற்கு, பெருமாள் கடவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கணேஸ்வரன் அவர்கள் நேற்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெருமாள் கடவை, அளவெட்டி தெற்கு.* (43912) (25-17-34)

தகவல்: **திருமதி சு.பரமேஸ்வரி** (மனைவி).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.